விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
'NATIONAL TAMIL DAILY'

மலர் 31 | ஆனி 7 | துல்ஹஜ்ஜா 16 | இதழ் 33
யாழ்ப்பாணம் | புதன்கிழமை | 21-06-1989

University of Jaffna Sri Lanka
Periodicals Division

## விமானப்பயணிகள் திடீர் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ்.-கொழும்பு விமானச் சேவையில் யாழ்ப்பாணத்தில் டிக்கட் பெறுவது இப்பொழுது 'முயற்கொம்பாக' இருக்கிறது.
பிரயாணிகள் திடீர் அதிகரிப்பே இதற்குக் காரணமாகும்.
வழக்கமாக ஒரு தடவையே நடைபெறும் இந்த விமானச்
(8-ம் பக்கம் பார்க்க)

## இலங்கைப் பிரச்னையில் வெளியார் ஊடுருவல்- ராஜீவ்

(புதுடில்லி)
''இலங்கை விஷயத்தில் வெளிநாடுகளின் ஊடுருவல் இருக்கலாமென இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி சந்தேகம் தெரிவித்துள்ளார்.
இது பற்றி பத்திரிகைகள் ஆராயவேண்டுமென்றும் அவர் கேட்டுள்ளார்.
(8-ம் பக்கம் பார்க்க)

# அவசரகாலநிலைமைச் சட்டம்

# மீண்டும் அமுலுக்கு வந்தது!

## சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட அரசு திடீர் அறிவிப்பு

(கொழும்பு)
நாடு முழுவதிலும் அவசரகாலநிலைமைச் சட்டம் உடனடியாக அமுலுக்கு வருவதாக அரசாங்கம் நேற்று அறிவித்தது.

நாட்டில் சட்டமும் ஒழுங்கும் உறுதியாக நிலைநாட்டப்படுவதன் மூலம் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவே அவசரகாலச் சட்டம் தயக்கத்துடன் அமுல்படுத்தப்படுவதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற ஐ. தே. க. பாராளுமன்றக் குழுக்கூட்டத்தில், அவசரகாலச்சட்டம் அமுல்செய்யப்படவேண்டியதன் அவசியத்தை பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் விளக்கிக் கூறினார்.

ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அமைச்சர் திரு. விஜேரத்ன பேசுகையில்:

''ஜனதிபதி கிளர்ச்சிவாதி
(8-ம் பக்கம் பார்க்க)

## ''மாணவர் பாதுகாப்பு உறுதிசெய்யப்படவேண்டும்'

### பாடசாலைகள் மாணவர் ஒன்றியம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
''மாணவர்களின் பாதுகாப்பை, எமது சுதந்திரமான நடமாட்டத்தை உறுதிசெய்யாதவரை, நாம் கல்வியைத் தொடர்வதில் எந்தவித அர்த்தமும் இல்லை. இதற்குப்
(8-ம் பக்கம் பார்க்க)

## இரு இளைஞர் சடலங்கள் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)
இரு இளைஞர்களின் சடலங்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் இந்திய அமைதிப்படையினரால் நேற்று ஒப்படைக்கப்பட்டது.
இறந்தவர்களின் சடலத்தில் துப்பாக்கிச்சூடு, கத்திக் குத்துக் காயங்கள் காணப்
(8-ம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பை உறுதிப்படுத்த அமைதிப்படை தவறிவிட்டது!

### பாராளுமன்றத்தில் பிரதமர் விஜயதுங்கா கவலை

[கொழும்பு)
கிழக்கு மாகாணத்தில் வாழும் சிங்கள, முஸ்லிம் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த இந்திய அமைதி காக்கும் படையினர் தவறிவிட்டதாக பிரதமர் திரு. டி. பி. விஜயதுங்க பாராளுமன்றத்தில் கவலை தெரிவித்தார்.
பாராளுமன்றம் நேற்றுக் கூடியபோது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர் திரு.
(7-ம் பக்கம் பார்க்க)

## திருநெல்வேலி சம்பவம்

(யாழ்ப்பாணம்)
திருநெல்வேலிப் பகுதியில் நேற்று முன்தினம் ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து உண்டான பதற்றம் நேற்றுக் குறைந்திருந்தது.
மோதலை அடுத்து அப்பகுதியில் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருந்ததும், பலர் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டதும் தெரிந்ததே.
(8-ம் பக்கம் பார்க்க)

## கத்திக்குத்துக்கு ஒருவர் பலி இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)
உறவினர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதல் காரணமாக ஒருவர் கத்தியால் குத்தப்பட்டு ஸ்தலத்திலேயே பலியானார். இருவர் படுகாயமடைந்தனர்.
சுன்னாகம் கொத்தியாவத்தையைச்சேர்ந்த கார்த்திகேசு சிவபாதசுந்தரம் (வயது-39) என்பவரே பலியானவராவார்.
காயமடைந்தவர்களில்
(8-ம் பக்கம் பார்க்க)

## ரயில் - பஸ் சேவை முற்றாக ஸ்தம்பிதம்!

[கொழும்பு]
கொழும்பில் நேற்று ரயில் சேவைகள் முற்றாக ஸ்தம்பிதமடைந்தது.
ரயில்பாதை சில இடங்களில் தகர்க்கப்பட்டதைத் தொடர்ந்தே சேவை ஸ்தம்பிதமடைந்ததாகத் தெரிகிறது.
ஊழியர்களுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்களைத்
(8-ம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு ஸ்தம்பிதம்

[மட்டக்களப்பு]
மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலவும் பீதி காரணமாக மட்டக்களப்பு நகர் ஸ்தம்பித நிலை அடைந்துள்ளன.
இ. போ. ச. வேலைநிறுத்தம் காரணமாக நேற்று ஒன்பதாவது நாளாக இ.போ.ச. பஸ் சேவை நடைபெறவில்லை.
நேற்றுமுன்தினம் தொடக்கம்
(8-ம் பக்கம் பார்க்க]

## சர்வஜன வாக்கெடுப்பு ஜூலை 5க்கு ஒத்திவைப்பு

[கொழும்பு]
கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 31ம் திகதி நடைபெற இருந்த வடக்கு-கிழக்கு இணைப்புக்கான சர்வஜன வாக்கெடுப்பு, ஜூலை 5ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டதாக பிரதமர் திரு. டி. பி. விஜயதுங்கா நேற்று பாராளுமன்றத்தில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் கூறினர்.

சர்வஜன வாக்கெடுப்பு மீண்டும் ஒத்திவைக்கப்படும் என்று பாதுகாப்பு இணையமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்ன கடந்த 7ம் திகதி கூறியிருந்தபோதிலும், உத்தியோகபூர்வமாக ஒத்திவைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## 8 பொலிஸார் பலி!

(கொழும்பு)
வடமத்திய மாகாணத்தில் இடம்பெற்ற கண்ணிவெடி தாக்குதல் சம்பவமொன்றில் எட்டுப்பொலிசார் கொல்லப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்று தெரிவித்தன. இதேவேளை இப்பகுதியில் இடம்பெற்ற மற்றொரு சம்பவத்தில் பஸ் சாரதி ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.
இவ்விரு தாக்குதல்களையும்
(8ம் பக்கம் பார்க்க)

## யாழ். - கொழும்பு வாகனங்கள் மீது றம்பாவைக்கருகில் தாக்குதல்

(நமது நிருபர்
ஆர். ரி. ரத்தினம்)
யாழ்ப்பாணத்திலிருந்து நேற்று கொழும்பு நோக்கிச் சென்ற வாகனங்கள் மீது மத [illegible] றம்பாவைக்கு மிடையே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.
இனந்தெரியாதவர்களினால் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலில் சிலர் காயமடைந்தனர்.
இத்தாக்குதலில் படுகாயமடைந்த லொறிச்சாரதி ஒருவர் றம்பாவைச் சந்தியில் நேற்றுக் காணப்பட்டார்.
மேலதிக விபரங்கள் எதுவும் உடனடியாகத் தெரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பாவித்த கதிரைகள், அலுமாரிகள் குசன், செற்றிகள், பல சட்டப்புத்தகங்கள் விற்பனைக்குண்டு. சி. சிதம்பரநாதன், அரசடி ஒழுங்கை, தாவடி வடக்கு, கொக்குவில். (சி-2985)

பருத்தித்துறை வீதியில் நர்சிங்ஹோம் முன்னால் அமைந்துள்ள 2½ பரப்பு காணியும், பலாலி வீதியில், திருநெல்வேலிசந்திக்கு அண்மையில் அமைந்துள்ள 1½ பரப்பு காணியும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: கு. சிவகுமார், 352, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-2989)

தமிழ்மொழி அடிப்படை அறிவும் செயல் நெறியும், ஆண்டு 7, 8, 9 இந்நூல்கள் மொழித்திறன், அடிப்படை இலக்கணம், தொடரியல், பாடநூல்கள், செயல் நெறிகள் என்பனவற்றுடன் தேர்வு வினாத்தாள்களும் கொண்ட புதிய வெளியீடாகும். திறமைச்சித்திக்கு மாணவர்களுக்கு இது ஒருகை விளக்கு. வெளியீடு கு. வி. அச்சகம், யாழ்ப்பாணம். (சி-2971)

உள்ளூரில் சுத்தமாக தயாரிக்கப்பட்ட குரக்கன் மா, கையால் குத்தி வறுத்தசிவப்பு அரிசிமா, கடலைமா, கையால் குத்திவறுத்த வெள்ளை அரிசிமா, உழுந்துமா ஆகியவை எங்களிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். M. G. M. 777, கே. கே. எஸ். வீதி. யாழ்ப்பாணம். 208, 1-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (சி-2926)

### விற்பனைக்கு

திருநெல்வேலி கலாசாலை வீதிக்கண்மையில் 4½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. சி. இராசரத்தினம் கலாசாலை வீதி. திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம். சி-2986

### யாத்திரை

காவலூர் புனித சிந்தாத்திரை மாதா செபமாலை ஸ்ரோர்ஸ் நிர்வாகிகளால் தனிப்பட்டவர்களுக்கான மடு யாத்திரை பஸ் மூலம் பிரயாணத்துக்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. விரும்பியோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும். புனித சிந்தாத்திரை மாதா செபமாலை ஸ்ரோர்ஸ், 140, சுருவில் வீதி, கரம்பொன், ஊர்காவற்றுறை. (சி-2987)

### சுன்னுகம் பல நோ. கூ. சங்கம் (வரைவுள்ளது) சுன்னுகம்

## முக்கிய அறிவித்தல்

சுன்னுகம் பல நோ. கூ. சங்கத்தின் விற்பனைக்கு உள்ளூர் தீட்டல் பச்சை அரிசி (சிகப்பு) தேவையாக இருக்கிறது. விற்பனை செய்ய விரும்பும் உற்பத்தியாளர் கில்லோகிறும் ஒன்றின் விலையையும் விற்பனை செய்யக் கூடிய ஆகக் கூடியதொகையையும் குறித்து தபால் மூலமோ அல்லது நேரிலோ 27-6-89க்கு முன்பு சமர்ப்பித்துக்கொள்ளலாம்.

**பொதுமுகாமையாளர்**
சுன்னுகம் பல நோ. கூ. சங்கம், சுன்னுகம். பி-293

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

### தொலைக்கல்வி: யாழ். பிராந்திய அலுவலகம்

(அச்சுவேலி)

ஆசிரியர் கல்வி தொடர்பான தொலைக்கல்வி அமைப்பின் யாழ். பிராந்திய அலுவலகம் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் செயற்படவுள்ளது.

யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் தொலைக்கல்வி அமைப்பின் அலுவலகத்தை அமைப்பதற்கான அனுமதியைக் கல்வியமைச்சு வழங்கியுள்ளது.

### சங்கீதசபை பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை சங்கீத சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் அடுத்த மாதம் 22ம் திகதி நடைபெறும்.

யாழ். பிரதிக் கல்விப்பணிப்பாளர் செல்வி தி.பெரியதம்பி தலைமையில் நல்லூர் ஸ்தான சி.சி.த. க. பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ள இப் பொதுக்கூட்டத்தில் பிரேரணைகளைச் சமர்ப்பிக்க விரும்பும் அங்கத்தவர்கள் தமது பிரேரணைகளை செயலாளருக்கு எழுத்துமூலமாக அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

### தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம் (வரைவுள்ளது)

## அறிவித்தல்

## வெற்றுச்சாக்கு கேள்விப் பத்திரம்

மேற்படி எமது சங்கத்தில் 8,000 வெற்றுச்சாக்குகள் கேள்விப் பத்திரம் மூலம் விற்பனைக்குள்ளது. மேலும் விபரங்கள் கேள்விப் பத்திரத்தில் குறிக்கப்பட்டுள்ளது. ரூபா 500/- வைப்புப் பணமாகத் தலைமைக் காரியாலயத்தில் செலுத்திக் கேள்விப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளவும். கேள்விப்பத்திர விண்ணப்பம் 1989-06-27 ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் பொதுமுகாமையாளர், தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம். தெல்லிப்பழை. என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வெற்றுச்சாக்கு கேள்விப்பத்திரம்'' எனத் தவறாது குறிப்பிடல் வேண்டும். கேள்விப்பத்திரம் உப சபையினர் முன்னிலையில் 1989-06-27 ம் திகதி பிற்பகல் 4-00 மணிக்குத் திறக்கப்படும்.

**பொதுமுகாமையாளர்.**
தெல்லிப்பழை. (சி-295)

### பாடசாலை மதிய உணவு

(ஆழியவளை)

ஆழியவளை சி. கி. பாடசாலையில் மதிய உணவு வழங்கும் வைபவம் கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் திரு. து. இராசரத்தினம் இதனை ஆரம்பித்துவைத்தார்.

### விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வக கொடிதினம்

[சுன்னுகம்]

விழிப்புல வலுவிழந்தோரினதும் முழுமையான அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட ''விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகத்திற்காக நிதிசேகரிப்பதற்கான கொடிவாரம் எதிர்வரும் 23ம் தேதி தொடக்கம் 29ம் தேதி வரை நடத்தப்படவுள்ளது.

யாழ் மாவட்டத்தின் ஐந்து கோட்டக்கல்வி அலுவலகங்களிலும் 23ம் தேதி முற்பகல் எட்டரை மணிக்கு கோட்டக் கல்வி அலுவலகங்களுக்குப் பொறுப்பான கல்வி அதிகாரிகளால் சமகாலத்தில் இக் கொடி விற்பனையை வைபவரீதியாக ஆரம்பித்து வைப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### மகோற்சவம்

[மாவிட்டபுரம்]

வர்த்தலைவிளான் மருதடி விநாயகர் ஆலய மகோற்சவம் நாளை வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாக உள்ளது.

புதிதாக கொடி ஸ்தம்பம் ஸ்தாபிக்கப்பட்டு முதன் முதலாக கொடியேற்ற வைபவம் இடம்பெற்றுத் தொடர்ந்து உற்சவம் இடபெறும்.

ஜுலை 2ம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்த உற்சவமும் இடம்பெறும்.

சிவாகம பூஷணம் சிவஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள் உற்சவத்தை நடாத்திவைப்பார்,

யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. ச. விநாயகமூர்த்தியின் சொற்பொழிவு நிகழ்ச்சியும் உற்சவகாலத்தில் இடம்பெறும்.

### வருடாந்த உற்சவம்

(வண்ணார்பண்ணை)

புங்குடுதீவு மேற்கு குறிகாட்டுவான் ஸ்ரீமனோன்மணி அம்பாள் வருடாந்த உற்சவம் அடுத்த மாதம் 5-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவிருக்கிறது. 14-ம் திகதி ரதோற்சவமும், 15-ம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது.

## காணி விற்பனை

(1) நல்ல சூழலும், ஏற்ற வசதிகளும் கொண்ட 1½ பரப்புக் காணியும், வீடும் நீர்வேலிப் பகுதியில் விற்பனைக்குண்டு.
(2) மல்லாகம் சந்திக்கு அருகாமையில் 3 பரப்பு 17.5 குளி விஸ்தீரணமுள்ள, வீடு கட்ட அல்லது வியாபாரத்திற்கு உகந்த காணி விற்பனைக் குண்டு.
(3) கைதடியில் 2 பரப்பு விஸ்தீரணமுள்ள 4 துண்டுகள் விற்பனைக்குண்டு.
(4) நுணாவிலில் 2 பரப்பு விஸ்தீரணமுள்ள 9 துண்டுகள் விற்பனைக்குண்டு.
(5) அல்லைப்பிட்டியில் 43 பரப்பு விஸ்தீரணமுள்ள காணி.

உங்கள் காணிகளை, வீடுகளை யாழ்ப்பாணத்தில் விற்க விரும்புகிறீர்களா?

கொழும்பில் காணிகள் வீடுகள் வாங்க, விற்க விரும்புகிறீர்களா? நாடுங்கள்:

## த பினான்ஸ் கொம்பனி லிமிட்;

249, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

இலங்கை பூராவும் 28 கிளைகளைக்கொண்டது. (ஏ 297)

## பிறந்ததின வாழ்த்து

### பிரதீப் இராமதாஸன்



சாவகச்சேரி சிவன்கோவிலடியைச் சேர்ந்த இராமதாஸன் சாந்தகுமாரி தம்பதிகளின் செல்வப் புதல்வன் பிரதீப் தனது முதலாவது பிறந்ததினத்தை (21-06-89) இன்று புதன்கிழமை அவரது அக்கா பிரம்னியுடன் கைதடிவடக்கில் கொண்டாடுகின்றார். இவரை பிரம்னி அக்கா, சிவா அக்கா, தேவி அத்தை (இந்தியா), குகன் சித்தப்பா, ரேணுகா சித்தி (இத்தாலி), ரகு சித்தப்பா (இத்தாலி), ராகவன் சித்தப்பா (கனடா), குரு சித்தப்பா, ஜீவா சித்தி (இத்தாலி), தயா அத்தை, அமரா அத்தை, விஜயன் சித்தப்பா, தெய்வா சித்தி, ஸ்ரீ சித்தப்பா (லண்டன்), புஷ்பா அத்தை, பெரிய அம்மா, பெரியப்பா, சிவாணி அக்கா, பெரிய அப்பம்மா, சின்ன அப்பம்மா, அம்மம்மா, சின்ன அம்மம்மாமார், பாட்டா, பாட்டி அனைவரும் பிரதீப்பை நீடூழி வாழ வாழ்த்துகின்றனர்.

(சி 2990)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### திரு. கிருஷ்ணபிள்ளை நாகராஜா

(''சிற்பக்கலாஜோதி'')

மலர்வு: 11-05-1952 உதிர்வு: 21-06:1988

அன்பின் திருவுருவே
தாங்கள் எம்மை விட்டுப் பிரிந்துசென்று
ஓராண்டு காலம்தான் சென்றுவிட்டன.
ஆனால் தங்களின் இனிய நினைவுகளும்
தங்கள் கைவண்ணத்திலே உருவான
கலை வடிவங்களும் காலத்தாலும் அழியாத
காவியமாகிவிட்டனவே.

உங்கள் பிரிவால் வாடும்:
**மனைவி, மக்கள், உற்றார், உறவினர்.**
தேவாலய வீதி, சங்கானை. (சி 2981)

## உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கான கம்பியூட்டர் கல்வி

### DIPLOMA IN DATA PROCESSING AND COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE

**ஆரம்பம்: 24 - 6 - 89 (சனி, ஞாயிறு) வகுப்புகள்**
**பயிற்சிக்காலம்: 3 மாதம்**

சேரும்போது செலுத்தவேண்டியது 500 மாத்திரம். O/L படித்த இருபாலாரும் சேரலாம். குளிரூட்டப்பட்ட அறையில் கூடிய நேர செய்முறைப்பயிற்சி. IBM (COMPATIBLE) கம்பியூட்டரில் வழங்கப்படும். பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். குறிப்பிட்ட தொகை மாணவ, மாணவியரே சேர்க்கப் படுவார்களாகையால் விண்ணப்பப்படிவத்தை பெற்றுப் பதிவு செய்து கொள்ளவும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 23 - 6 - 89.**

## UNIKCO COMPUTER CENTRE

No. 5, மின்சாரநிலைய வீதி, [2-ம் ஒழுங்கை], யாழ்ப்பாணம்.
(உப தபாற்கந்தோர் அருகாமை) (சி-[illegible])

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# "அமெரிக்க, சோவியத் அணு ஆயுத தளங்களை இருநாட்டு நிபுணர்களும் பரிசோதனை செய்ய வேண்டும்"

## புஷ்ஷின் யோசனை குறித்து ரஷ்யா அதிருப்தி

(ஜெனிவா)

"நீண்டதூர அணுஆயுத ஏவுகணைகளை குறைப்பது தொடர்பாக ஒப்பந்த மொன்றைச் செய்துகொள்வதற்கு முன்னர் சோவியத்யூனியனிலும் அமெரிக்காவிலும் உள்ள ஏவுகணைத் தளங்களை இரு நாட்டு நிபுணர்களும் பரஸ்பரம் பரிசோதனை செய்யவேண்டும்.''

இவ்வாறு அமெரிக்க அதிபர் திரு. ஜோர்ஜ் புஷ் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளிலும் ஏவுகணைத் தளங்களை இரு நாட்டு அதிகாரிகளும் பரிசோதனை செய்யும்பட்சத்திலேயே அணு ஆயுதக் கட்டுப்பாட்டு ஒப்பந்தமும் அதன் செயற்பாடுகளும் சாத்தியமாகும் என்றும் திரு. புஷ் தெரிவித்துள்ளார்.

இதேவேளையில், அமெரிக்க அதிபரின் இந்த அறிவிப்புக் குறித்து சோவியத் யூனியன் அதிருப்தி தெரிவித்துள்ளது.

திரு. புஷ்ஷின் இந்த யோசனையினால் ஆயுதக் கட்டுப்பாட்டு ஒப்பந்தமொன்றை விரைவில் செய்யக்கூடிய வாய்ப்புக்கள் அற்றுப்போய் விட்டன என்று சோவியத் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க, சோவியத் யூனியனுக்கும் அமெரிக்காவுக்குமிடையிலான ஆயுதக் கட்டுப்பாடு குறித்த பேச்சுவார்த்தைகள் ஏழு மாத இடைவெளிக்குப் பின் நேற்று முன்தினம் மீண்டும் ஜெனிவாவில் ஆரம்பமாகியுள்ளன.

அணு ஆயுதப் போர் அபாயத்தைத் தடுக்க அமெரிக்க அதிபர் திரு. புஷ் உறுதி பூண்டுள்ளதாக இப்பேச்சுவார்த்யில் கலந்துகொண்ட அமெரிக்கப் பிரதிநிதி தெரிவித்தார்.

## சோவியத்துடன் நல்லுறவு: அயத்தொல்லா கொமெய்னி மரணப்படுக்கையில் ஆலோசனை

### ஈரான் சபாநாயகர் ரஷ்யா விஜயம்

(மாஸ்கோ)

ஈரானின் எதிர்கால ஜனதிபதி எனக்கருதப்படும் தற்போதைய சபாநாயகர் ஜனுப் ரஸ்தான்ஜானி, சோவியத் யூனியனில் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றைமேற்கொண்டுள்ளார்.

கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்னர் அண்மையில் காலஞ்சென்ற ஆன்மீகத் தலைவர் அயத்தொல்லா கொமெய்னியின் தலைமையில் இடம்பெற்ற இஸ்லாமியப் புரட்சியின் பின் ஈரானிய அரசியல் தலைவர் ஒருவர் சோவியத் யூனியனுக்கு விஜயஞ்செய்வது இதுவே முதல் தடவையாகும்.

ஜனுப் ஜானியின் இவ்விஜயத்தின்போது இரு நாடுகளுக்கும் இடையில் இராணுவ, பொருளாதார ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளையில் மறைந்த தலைவர் அயத்தொல்லா கொமெய்னியின் மரணப்படுக்கையில் வைத்து, சோவியத் யூனியனுடனை உறவுகளை அபிவிருத்தி செய்வதில் காலம் தாழ்த்தவேண்டாம் என்று தமக்கு ஆலோசனை கூறியதாக ஜனுப் ஜானி தெரிவித்துள்ளார்.

## வட-கிழக்கு இளைஞர்களுக்கு பாதுகாப்பு பயிற்சி!

### அமைதிப்படை விலகலுக்கு முன் இது அவசியம் என்கிறார் கம்யூனிஸ்ட் தலைவர்

(சென்னை)

இலங்கையிலிருந்து இந்தியப் படைகளை விலக்குவதற்கு முன் வடக்கு கிழக்கு மக்களுக்கு அவர்களின் சுயபாதுகாப்புக்கான பயிற்சியும் வசதியும் செய்து கொடுக்கவேண்டும்என்றும்இந்தியகம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் திரு. இந்திரஜித்குப்தா சென்னையில் தெரிவித்தார்.

இலங்கை விவகாரத்தில் இந்திய கம்யூனிஸ்ட்கட்சி கொள்கையளவில் மாறிவிட்டது என்று கூறப்படுவதற்கு மறுப்புத் தெரிவித்த திரு. குப்தா மேலும் கூறியதாவது;

எந்த ஒருநாட்டிலும் வெளியார் இராணுவம் காலவரையறை இன்றி தங்கியிருக்க முடியாதுதான், ஆனல் இலங்கையின் வடக்கு-கிழக்கு நிலைமையைப் பொறுத்தவரை ஜனதிபதி கூறுவது போல் அமைதிப்படையை உடனடியாக விலக்கமுடியாது,

இந்தியப்படை விலகலுக்கு முன் வடக்கு-கிழக்குஇளைஞர்களுக்குப் பாதுகாப்பு பயிற்சி அளிக்கப்படவேண்டியது அவசியம்.

## "ஒப்பந்தத்தைக் கைவிட இலங்கை முயல்கிறது"

### பண்டுருட்டி இராமச்சந்திரன் கூறுகிறர்

(சென்னை)

இலங்கை-இந்திய அமைதி ஒப்பந்தத்தை இந்தியா அமுல் நடத்திவரும் வேளையில் அந்த ஒப்பந்தத்தைக் கைவிட இலங்கை அரசு முயன்றுவருகிறது. இலங்கைஅரசின் இந்த முயற்சி பயங்கர விளைவுகளையே ஏற்படுத்தும்.

இவ்வாறு தமிழ்நாடு முன்னள் மின்சக்தி அமைச்சர் திரு. பண்டுருட்டி இராமச்சந்திரன் தெரிவித்தார்.

சென்னையில் மக்கள் ஜனநாயகப் பேரவை நடத்திய 'இலங்கை-இந்திய ஒப்பந்தம்' குறித்த கருத்தரங்கில் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது;

இலங்கையில் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் இந்திய அமைதிப் படையின் பணிகள் முழுமையாக நிறைவேற்றப்படும் வரை படையை விலக்கமுடியாது.

இலங்கையும், இந்தியாவும் ஆதிபத்திய உரிமைகள் கொண்ட நாடுகள்தான். ஆனல் இரு நாடுகளினலும் செய்து கொள்ளப்பட்ட அமைதி ஒப்பந்தம் அதைவிட ஆதிபத்திய உரிமை கொண்டது.

எழுத்தாளர் திரு. ஜெயகாந்தன், பத்திரிகையா[illegible] சோ உட்படப் பலர் [illegible] யாற்றினர்.

## துருப்புக்கள் நூற்றுக்கணக்கில் விடுதலை

(பிரிட்டோரியா)

தென் ஆபிரிக்க சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டிருந்த நூற்றுக் கணக்கான துருப்புக்கள் நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டபின் நமீபியா திரும்பியபோது நமீபிய மக்கள் குதூகலத்துடன் வரவேற்றனர்.

## திடீர் பரிசோதனை

(பலாலி)

யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் திணைக்களத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் வைத்தியசாலைகள், மருந்தகங்கள், சுகாதார அலுவலகங்க[illegible] கள்.

## உலக வலம்

### இந்தியாவில் 60 ஆயிரம் பங்களாதேஷ் அகதிகள்

(புதுடில்லி)

இந்திய மாநிலமான திரிபுராவுக்குள் கடந்த ஓரிரு தினங்களில் 10 ஆயிரம் பங்களதேஷ் அகதிகள் வந்துசேர்ந்துள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுடன் திரிபுராவில் தற்போது 66 ஆயிரம் அகதிகள் இருக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

### பர்மா 'மியாமா' ஆனது

(யங்கூன்)

பார்மா நாடு இனிமேல் 'மியாமா, என்றும் அதன் தலைநகரான ரங்கூன் 'யங்கூன்' என்றும் ஆங்கிலத்தில் அழைக்கப்படும் என்று உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## 360 மணி நேர சாதனைக்காக தொடர்ந்து பேசும் ஜெயராமன்

(சென்னை)

தொடர்ந்து பேசிக்கொண்டிருப்பதில் புதிய உலகசாதனை ஒன்றை நிலைநாட்டிய முன்னள் சாதனை வீரர் ஒருவர் இந்தத் தடவை தமது சாதனையை எவரும் முறியடித்து விடக்கூடாது என்பதற்காக சென்னை தங்க கடற்கரையில் தொடர்ந்தும் பேசிக்கொண்டிருக்கிறர்.

எஸ். ஈ. ஜெயராமன் என்ற 55 வயது நபர் 87ம் ஆண்டு 200 மணி நேரம் தொடர்ச்சியாகப் பேசி உலக சாதனையை நிகழ்த்தினர். இவரது சாதனையை கடந்த ஆண்டில் 260 மணிநேரம் தொடர்ந்துபேசிய என். எஸ். விசுவநாதன் என்பவர் முறியடித்தார்.

இப்போது தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கும் ஜெயராமன் நேற்று முன்தினம் காலை 7 மணியுடன் 270 மணி நேரம் பேசி விசுவநாதனின் சாதனையை முறியடித்து விட்டார். எனினும் தமது இந்த சாதனையை எவரும்முறியடிக்காதவகையில் இம்மாதம் 23ம் திகதி வரை 360 மணித்தியாலயங்கள் பேசுவது என்ற தமது இலக்கை அடைவதற்குற்காக தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கின்றர்.

## சோவியத்தின் மற்றொரு குடியரசிலும் வன்முறை!

(மாஸ்கோ)

சோவியத் யூனியனின் மற்றொரு மத்தியஆசியக் குடியரசிலும் அரசுக்கு எதிராக வன்முறை சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாகவும் இச்சம்பவங்களினல் பலர் கொல்லப்பட்டனர் என்றும் சோவியத் செய்தி நிறுவனமான 'டாஸ்' தெரிவித்தது.

கடந்த வெள்ளிக்கிழமை கஸ்பியன் கடலுக்கு அண்மையில் உள்ள கலகஸ்தான் குடியரசில் ஆரம்பமான வன்முறைச் சம்பவங்களில் பல இளைஞர்கள் துப்பாக்கிகள், பெற்றேல் வெடிகுண்டுகள்; இரும்புக்கம்பிகள் சகிதம் வன்முறைச் செயல்களில் ஈடுபட்டதாகவும் இதனை அடுத்து போக்கு வரத்துக்கள் ஸ்தம்பிதமடைந்து தொழிற்சாலைகளும் கடைகளும் மூடப்பட்டதாகவும் கலகத்தைக் கட்டுப்படுத்த பொலிசாரும்இராணுவத்தினரும் அங்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

சோவியத் யூனியனின் மற்றுமொரு குடியரசான உஸ்பெக்கிஸ்தானில் கடந்தவாரம் இடம்பெற்ற இனக்கலவரங்களின் போது 100 பேர் வரை கொல்லப்பட்டதும் 16 ஆயிரம் 'மிஷ் கெட்டியன்' சிறுபான்மை மக்கள் அகதிமுகாம்களில் தஞ்சம் புகுந்ததும் தெரிந்ததே.

## இன்று பட்டிமன்றம்

(யாழ்ப்பாணம்)

'இன்றைய சமுதாயத்துப் பெண்கள் பாரதி கண்ட புதுமைப்பெண்களா'? என்ற தலைப்பில் இன்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் பட்டி மன்ற மொன்று நடைபெறவுள்ளது. தமிழ் மன்றத்தின் ஆதரவில் இப் பட்டிமன்றம் நடைபெறும்.

## வருடாந்த விழா

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு அருள்மிகு அந்தோனியார்ஆலய வருடாந்த உயர்விழா அடுத்தமாதம் 7ம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும். இவ்விழா மூன்று நாட்கள் நடைபெறும்.

## ரதோற்சவம்

(ஒட்டுசுட்டான்)

புளியங்கூடல் மகாமாரி ஆலயத்தில் இம்மாதம் 24-ந் திகதி ரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

சமாதானமாகச் செல்லும் ஒரு மனிதனை எத்தனை நாட்களுக்குத்தான் வதைக்க முடியும்? மரணத்தை வரவேற்பவரைக் கொல்வதில் உற்சாகம் தோன்றுது. ஆசையால்தான் போர்வீரர்கள் விரோதியை உயிருடன் பிடிப்பதில் மிகுந்த முயற்சி எடுக்கின்றனர்.

— மகாத்மா காந்தி

# நமது நோக்கு

## ஒரு கோப்பை 'நூடிள்ஸ்!'

ஏழ்மையில் சிக்கித் தவிக்கிருள்ஒருவிதவை.பட்டினியால்வாடிச் சோர்ந்துவிட்ட இரு பிள்ளைகளுடன் ஒரு சாதாரண உணவு விடுதிக்குச் செல்கிருள். ஒரு கோப்பை நூடிள்ஸ்ஸுக்கு 'ஓடர்' கொடுக்கிருள். விடுதிக்காரன் இரங்குகின்ருன்; சற்றுக் கூடுதலாகவே போட்டு வந்து கொடுக்கிருன். ஒருவருக்கே போதாத அச் சிறு உணவை மூவரும் ஆவலோடு உண்கிருர்கள். அவர்களுக்கு அது பெருவிருந்து 'அம்மா, இன்னும் சாப்பிடு' என்று தன் பசியை ஏமாற்றித் தாய்ப் பசியைப் போக்க முனைகிருன் ஒரு மகன்!

உலகிலே இரண்டாவது செல்வந்த நாடாக விளங்கும் ஜப்பானில் நடந்த இந்தஉண்மை நிகழ்ச்சியை, உணர்வைக் கிளறும் விதமாகக் கதையாக்கினுன் றயோஹை குயூறி.

நாடுகள் எங்கும் நாளாந்தம் சிறுகதைகள் எழுதப்படுகின்றன. பல்லாயிரக்கணக்கானேர் அவ்வப்போது ஏற்படும் உணர்ச்சியோடு படித்துவிட்டுத் தமது கவலைக்குள் மூழ்கி விடுகின்ருர்கள். ஆனுல் இந்த 'ஒரு கோப்பை நூடிள்ஸ்!' என்ற கதையோ ஜப்பானை ஒரு கலக்குக் கலக்கி வருவதாகச் செய்திகள் வந்துள்ளன.

ஜப்பான் நாட்டிலே ஒரு கம்பெனி தனது வருடாந்த விழாவுக்கு இச்சிறுகதை எழுத்தாளனை அழைத்துச் சிறப்பு நிகழ்ச்சியாகக் கதாசிரியனையே அக்கதையை நேரில் கூற வைத்தது. நடந்தது என்ன? கேட்டவர்கள் அத்தனை பேரும் கண்ணீர் சிந்தியிருக்கிருர்கள். சிந்திய கண்ணீர் ஜப்பானில் மறைந்திருக்கும் ஏழைகளின் வாழ்க்கையைச் சிந்திக்க வைத்தது.

கருத்துப்பொறி ஓரிடத்தில் வந்தால் அது பரவும் வேகத்தை யாரால்தான் தடுக்கமுடியும்? பாடசாலைகள், கருத்தரங்குகள் பலவற்றுக்குக் கதாசிரியன் அழைக்கப்பட்டிகிக்கிருன். கருத்துப்புரட்சி சில மாதங்களாகப் பரவிவருகின்றது. கதையைக் கேட்ட ஒரு பெண்மணி; ''கதையைக் கேட்டுக் கண்ணீர் விட்டதனுல், எனது மனதில் வேரூன்றிய மன நெருடல்களும், அழுத்தங்களும் எவ்வளவோ குறைந்துள்ளன!' என்ருள். கதை அப்பெண்ணுக்கு மனநோய் மருத்துவமாக மாறியிருக்கிறது!

''இரண்டாவது யுத்தத்தில் எமது நாடு அணுகுண்டால் அழிக்கப்பட்டபின் எமது மக்கள் ஏழ்மையால் வாடித்துடித்ததை இக்கதை நினைவு படுத்துகிறது!'' என்கிருர் ஒரு ஜப்பானிய வயோதிபர்.

செல்வந்த நாடான ஜப்பானில் 'பணநாயகம்' ஆட்சிபுரிகின்றது. மக்கள் ஓடி ஓடி உழைத்தும், மன அமைதி காண்கிருர்கள் இல்லை. மனித சமுதாயத்திலே அன்பு, கருணை, இரக்கம் என்ற குணங்கள் செல்லாக்காசாகி விட்டன. ஏழைகளைப்பற்றிச் சிந்திக்கவே நேரமில்லாமல் ஓடித் திரியும் ஜப்பானியருக்கு இக்கதை ஒரு அதிர்ச்சி வைத்தியம் என்பது நமது நம்பிக்கை.

இப்படிக்கதைகள் வந்து கருத்துப்புரட்சியை ஏற்படுத்தி, அரசியல், சமுதாயத்திலே மாற்றங்கள் ஏற்படுத்தியது இது முதன் முறை அன்று.

அமெரிக்காவிலே தோட்டங்களிலே வேலை செய்வதற்காக வந்து குடியேறியவர்களே கறுப்பு நிற நீக்குரோ மக்கள். இவர்கள் அடிமைகளாகவே நடத்தப்பட்டார்கள். இவர்கள் பட்ட துன்பங்கள் தெரிய வேண்டியவர்களுக்குத் தெரிந்தும் செய்யவேண்டிய சீர்திருத்தங்கள் செய்யப்படவில்லை. ஆனுல் ஒரு ஏழைப் பெண் இவர்கள் வாழ்க்கையைச் சித்திரித்து 'தொம் மாமாவின்குடிசை' என்ற நூலை எழுதினுள். இது ஏற்படுத்திய கருத்துப் புரட்சி, ஜனுதிபதி லிங்கன் எடுத்த நடவடிக்கைகள், வடக்குத் தெற்கு அமெரிக்காவெனப்பிரிந்து ஏற்பட்ட உள்நாட்டுக் கலவரங்கள் எல்லாம் இப்போது வரலாற்று நிகழ்ச்சிகள்.

''ஒரு கோப்பை நூடிள்ஸை'' கதையின் இன்னெரு பகுதி, கஷ்டங்கள் பலவற்றைத் தாங்கி கடனில் ஒருபகுதியைத் திருப்பிக்கொடுத்து விட்டு அடுத்தாண்டு அதே உணவு விடுதிக்குச் சென்றிருக்கிருள் அந்த விதவை, இரு பிள்ளைகளுடன் இம்முறை இரு கோப்பை 'நூடிள்ஸ்' ஸுக்கு ஓடர் கொடுத்திருக்கிருள் தனது செல்வச் செழிப்பைக்காட்ட இடையிலே பட்ட துன்பங்களைக் கேட்ட விடுதிக்காரனும் மனைவியும் கண்ணீர் விட்டார்களாம்!

ஜப்பானில் தோன்றிய இந்தக்கருத்துப் புரட்சி, அன்பு, இரக்கம் போன்ற மறைந்து போகும் பண்புகளை மற்றைய நாடுகளுக்கும் பரப்புமா?

## திருப்பணி வேலைகள்

(சுன்னுகம்)

புன்னுலைக்கட்டுவன் ஆயக் கடவைப் பிள்ளையார் ஆலய கட்டிடப் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. எதிர்வரும் ஜனவரி மாதமளவில் கட்டிடவேலைகள் பூர்த்தியாகி கும்பாபிஷேக வைபவம் நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத்திருப்பணி வேலைகள் காரணமாக [illegible] வருடாந்த [illegible] நடைபெருதென தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாற்புறமும் கடலலைகள் ஆர்ப்பரிக்க - வெள்ளம்போல திரண்டிருந்த மக்கள் 'அரோகரா' என்று ஒலி எழுப்ப.....

# அன்னை தேர்மீதமர்ந்திருந்து அருளாட்சி பொழிந்தாள்!

நாலா பக்கமும் கடல் அலைகள் ஆர்ப்பரிக்க பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் 'அரோகரா' என 'கோஷம்' எழுப்ப- அன்னை பராசக்தி- நயினை நாகபூஷணி அம்மாள் தேரின் மீது ஆரோகணித்து வந்த காட்சியை காணுதகண் என்ன கண்ணே!

பார்த்தஇடமெல்லாம் நீக்கமற நிறைந்திருந்த பக்தர்களுக்கு அபயக்கரம் நீட்டி- அருள்மாரி பொழிந்தாள் அன்னை!

ஞாயிறுகாலை- கதிரவன் கதிரொளி பரப்ப முன்னரே குறிகாட்டுவான் துறையிலும் நயினுதீவு இறங்கு துறையிலும் நயினுதீவு பௌத்த விகாரை துறையிலும் சமுத்திரமே பொங்கி எழுந்து வந்ததுபோல, பக்தர்கள் சாரிசாரியாகத் திரண்டு ஆலயத்தை நோக்கி வந்துகொண்டிருந்தார்கள்.

தேரின் மீதமர்ந்திருக்கும் அம்பாளின் திருமுகத்தை ஒருதடவையாவது கண்டு தரிசித்துஎகிடவேண்டுமென்று தவியாய்த் தவித்தார்கள்.

நமது நிருபர்கள்

**எஸ். பாலசிங்கம் - இ. சற்குருநாதன்**

ரதோற்சவத்துக்கு முதனுளே ஆலயத்துள் இடம் பிடித்துக்கொண்ட அடியார் கூட்டத்தினுல், பின்னர் வந்துகொண்டிருந்தவர்கள் ஆலயத்தைஅண்மிக்க முடியாமல் அவஸ்தைப்பட்டுக் கொண்டார்கள். இருந்தாலும் தாங்கள் வந்துஇறங்கிய துறைகளிலேயேதங்கியிருந்து–அம்மாளை தரிசித்துவிட்டு வீடேகியதைக் காணக்கூடியதாக இருந்தது.

தேர் உற்சவத்திற்கு வந்தவர்களில் பலர் நயினுதீவுக்குச் செல்லமுடியாது குறிகாட்டுவானுடன் திரும்பிச்சென்றதையும் காணமுடிந்தது.மேலதிகமாகப் படகுச் சேவைகள் நடைபெற்றபோதும் துறைமுகத்தில் சன நெருக்கடியைக் கட்டுப்படுத்த முடியாதநிலை தொண்டர் படைகளுக்கு ஏற்பட்டது. எப்படியாவதுதேரடி கணரோவண்டும் என்ற நிலையில் உள்ள பக்தர்கள் நண்பகல்வரை துறைமுகத்தில் காத்திருந்து நயினுதீவனைச் சென்றடைந்தனர். பிற்பகல் ஏழு மணிவரை படகுச்சேவைகள் நடைபெற்றதாயினும் மக்கள் தமது பயணத்தைத் தொடரமுடியாமல் நயினுதீவிலும், குறிகாட்டுவான் துறையிலும் தங்கிநிற்கும்நிலை ஏற்பட்டது.

### பஸ் பயணிகள் பாதிப்பு

குறிகாட்டுவானிலிருந்துமாலை ஆறுமணி வரை யாழ்ப்பாணத்திற்குப் பஸ் சேவைகள் இடம் பெற்றதாயினும் பல நூற்றுக் கணக்கான மக்கள் தத்தமது இடங்களுக்குச் செல்லமுடியாது இரவு எட்டு மணி வரை யாழ்ப்பாணம் பஸ்நிலையத்தில் நின்றதையும் காணமுடிந்தது. 'ஓட்டோ ராக்ஸிகளின்' மூலமும், தனியார் வாகனங்கள் மூலமும் அதிக கட்டணம் செலுத்தியே பலர் தமது இருப்பிடங்களுக்குச் சென்றனர்.

மாலை ஆறு மணிக்குக் குறிகாட்டுவானிலிருந்து புறப்பட்ட ஐந்து பஸ்களும், ஒன் [illegible] ஏழு [illegible] நிலையம் [illegible] தடைந்தன. இதனுலேயே இந்தப் பிரயாணக் கஷ்டம் பலருக்கு ஏற்பட்டது. அதிகமான யாத்திரிகர்கள் மறுநாள் காலையே யாழ். நகர் வந்தனர்.

### மனேன்மணியின் சேவை

குறிகாட்டுவான் துறையில் தேங்கி நின்ற மக்களுக்கு குறிகாட்டுவான் ஸ்ரீ மனேன்மணி அம்பாள் அன்னதான சபையினர் அன்னதானம் வழங்கினர். பல ஆயிரக்கணக்கான யாத்திரிகர்களுக்கு இந்த அன்னதான சபை ஆறுதல் கொடுத்துதவியது. நயினுதீவிலிருந்து குறிகாட்டுவான் வந்து சேர்ந்த மக்கள் பலர் மனேன்மணி அம்பாள் ஆலயத்தில் தங்கி இருந்தனர். நண்பகல் நயினுதீவு சென்றடைய முடியாத மக்கள் பலர் இவ்வாலய அன்னதான நிகழ்ச்சியிலேயே தமது விரதத்தை நிறைவு செய்தனர்.

### தொண்டர் சேவைகள்

தீவுப்பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். சடாட்சர சண்முகதாஸ் தலைமையில் கிராம சேவைஅலுவலகளும், அலுவலக உத்தியோகத்தர்களும் சேவையில் ஈடுபட்டிருந்தனர். யாழ்ப்பாண மாவட்ட இந்து இளைஞர் பேரவை ஆணையாளர் திரு. இ. சுவாமிநாதன் தலைமையில் ஆதீனத்தொண்டர்கள் நயினை நாகபூஷணி அம்பாள் தொண்டர் படையினருடன் சேர்ந்து பணியாற்றினர். சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவினரும், ஏனைய தொண்டர் நிறுவனங்களும் சேவையில் ஈடுபட்டனராயினும் மக்கள் வெள்ளத்தைக் கட்டுப்படுத்த முடியாத நிலையே இருந்தது. நயினையில் இரண்டு மைல் நீளமுடைய கியூவரிசையில் இரண்டு பக்கமாக மக்கள் படகுகளில் ஏறுவதற்கு காத்து நின்றனர்.

### கடற்படையின் சேவை

நயினையில் உள்ள பௌத்த விகாரைக்குச் சென்ற மக்களை கடற்படையினர் கடற்படைத் துறைமுகத்தினூடாக அனுப்பிவைத்து உதவினர். விகாரைக்குச் சென்ற மக்களை விகாரையிலுள்ள மகாவிஷ்ணு ஆலயத்திற்கு அழைத்துச் சென்று காண்பித்த கடற்படையினர், குளிர்பானங்களையும் பிஸ்கட்டுகளையும் வழங்கி யாத்திரீகர்களை அனுசரித்தனர். இப்பகுதியில் அமைதிப் படையினரும் சேவையில் ஈடுபட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

நயினை அம்மாள் தனது பக்தகோடிகளுக்கு எந்தவித குறையும்ஏற்படவிடாமல்காப்பாற்றியது அவள் அருள்தான்.

'அமுத சுரபி' அன்னதான சபை இடைவிடாது அளப்பரிய சேவையாற்றிக் கொண்டிருந்தது எமக்குப் பெருமையளிப்பதாகும். அன்னதான சபையின் மண்டபத்திற்குள் செல்வதற்கு வரிசை குலையாமல் இருக்க அமைதிப்படையினர் உதவி புரிந்தனர். இடநெருக்கடிகளிலிருந்து தம்மைத்தாமே பாதுகாக்கும் திடம் மக்களிடம் காணப்பட்டதால் அசம்பாவிதங்கள் பெரியளவில் ஏதும் இடம் பெறவில்லை. மாலை நான்கு மணிவரை அம்பாள் தேரிலிருந்து பக்தர்களுக்கு அருள் பாலித்துக் கொண்டிருந்தாள்.

மக்கள் கூட்ட நெரிசலினுல் மயக்கமுற்ற குழந்தைகளையும் வயோதிபர்களையும் பாதுகாத்து அவர்களுக்கு முதல் உதவிச்சிகிச்சை வழங்குவதில் தொண்டர்கள் ஈடுபட்டனர்.

நயினை சென்றிருந்த நல்லை திருஞான சம்பந்தர்ஆதீனகுரு ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர பரமாசாரியசுவாமிகள் தொண்டர்கள் ஆற்றிக்கொண்டிருந்த சேவையைப் பார்வையிட்டு பாராட்டினுர்.

தேரில் அமர்ந்திருந்த அம்பாளுக்கு அர்ச்சனை செய்வதற்கு ஆயிரக்கணக்கான பக்தர்கள் கியூவரிசையில் நின்றனர். ஆண்கள் ஒரு வரிசையாகவும் பெண்கள் ஒருவரிசையாகவும் அர்ச்சனைத்தட்டங்களுடன் சென்ற காட்சி பக்தி மேலீட்டை ஏற்படுத்துவதாக அமைந்திருந்தது.

தேர்த்திருவிழாவைக் காண முடியாத பக்தர்கள்தீர்த்தஉற்சவத்திலாவது அம்பாளைத் தரிசிக்கவேண்டுமென்று தவம் கிடந்ததையும் எம்மால் காண முடிந்தது.

### திருடர்கள் கைவரிசை

யாத்திரிகர்களுக்கிடையில் திருடர்களும் தங்களது கைவரிசைகளை காட்டத்தவறவில்லை. ஏழுதங்கச்சங்கிலிகளும் மூன்று தாலிக்கொடிகளும் மற்றும் பெறுமதியான பொருள்களும் திருடப்பட்டுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது.

# பலதும் பத்தும்

### கலவரம் பரவுமா?

இவ்வாண்டு பெப்ரவரியில் வெனிசுவேலா நாட்டில் பெற்ருேல் விலையேறியது; போக்குவரத்துச் செலவு அதிகரித்தது. ஏற்கனவே பொருளாதார நெருக்கடிகளான இந்தத் தென்னமெரிக்க நாட்டில் விலை ஏற்றத்தை எதிர்த்துக் கலவரம் மூண்டது

பணவீக்கத்தாலும், அதனுல் ஏற்பட்ட பொருளாதாரத் தலையிடிகளாலும் ஆர்ஜெண்டீனுவில் கலவரம் ஏற்பட்டிருக்கிறது. 20 வருடங்களாக இத்தகைய கலவரங்கள் ஏற்படவில்லை என்பது அவதானிகள் கூற்று.

இதேபோன்று பணவீக்கத்தாற் பாதிக்கப்பட்டுமக்கள் கலவரங்கள் வேறெங்கு ஏற்படலாம்? கால அவதான நிலையம் போன்று கலவர அவதான நிலையம்ஒன்று அமெரிக்காவில் இயங்குகின்றதா?

லத்தீன் அமெரிக்காவின் பல நாடுகள் மூன்ரும் உலக அணியைச் சேர்ந்தவை; பொருளாதாரச் சிக்கலுக்குள் அகப்பட்டுச் சிக்கித் தவிப்பவை. இராணுவப் புரட்சிகளும் அமெரிக்க எதிர்ப்புக் கோஷங்களும் இங்கு இடையிடையே கேட்கும். தென்னமெரிக்க நாடுகளின் பொருளாதார, அரசியல் நடவடிக்கைகளை அவதானித்து ஆய்வு செய்து அறிக்கைகள் விடுகிறது ஆய்வு நிலையம். அந்த ஆய்வு நிலையம் அடுத்துக் கலவரம் பரவக்கூடிய நாடுகளாக அறிவித்திருப்பவை பிறேசில் கயானு.

--வாணி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வடமராட்சியில் உணவு முத்திரை

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதியில் உணவு முத்திரைகள் வழங்கும் நடவடிக்கைகளில் மூன்று உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் ஈடுபட்டுள்ளன.

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும், கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் பெரும்பாலான உணவு முத்திரைகள் வழங்கப்பட்டுவிட்டன.

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் முத்திரைகள் பற்றாக்குறைவால் புலோலி–கிழக்கு கிராமசேவை அலுவலர் பிரிவுக்கு உணவு முத்திரைகள் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய இறக்குமதிக் கட்டுப்பாடுகள்

# நூறு சதவீத விலை அதிகரிப்பல்ல; நூறு சதவீத வங்கி வைப்பேயாகும்!

## இறக்குமதியாளர் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்படலாம்!

[யாழ்ப்பாணம்]

வெளிநாடுகளிலிருந்து பொருட்களை இறக்குமதி செய்வதற்காக வங்கியிலிருந்து தேவையான ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு இறக்குமதியாளர்கள் இனிமேல் முழுத்தொகைப் பணத்தையும் வங்கிக்குச் செலுத்தவேண்டும்.

இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் மொத்தப் பெறுமதியில் நாலில் ஒரு பங்கை மாத்திரமே இறக்குமதியாளர் வங்கியின் உத்தரவாதத்துடன் முன்னர் வங்கிக்குச் செலுத்தி சம்பந்தப்பட்ட ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது.

நாட்டில் அந்நியச் செலாவணிக்கு ஏற்பட்டிருக்கும் தட்டுப்பாட்டை ஈடுசெய்வதற்காகவும், இறக்குமதிகளைக் குறைப்பதற்காகவும், பொருளாதார வீழ்ச்சியை நிவர்த்தி செய்வதற்காகவும் இந்தச் சலுகை ரத்துச்செய்யப்பட்டிருப்பதாக வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

புதிய இறக்குமதிக் கட்டுப்பாட்டின் கீழ் வரும் பாவனைப் பொருட்களின் விபரம் வருமாறு:-

வீட்டுப் பாவனைக்கான எரிவாயு (காஸ்), மின்சார, இயந்திர உபகரணங்கள், குளிரூட்டு சாதனங்கள், குளிர் சாதனங்கள் ஆகியவற்றுக்கான உபகரணங்கள், மட்பாண்ட வகைகள், அல்கஹோல் சேர்க்கப்பட்ட மதுபான வகைகள், சிகரெட் வகைகள், புகையிலை உற்பத்திப் பொருட்கள், கம்பியூட்டர்கள், தரவு சேகரிக்கும் சாதனங்கள்.

தளபாட வகைகள், கண்ணாடி தம்ளர்கள், கண்ணாடி வகைகள், புளோரசன்ற் விளக்கைத் தவிர்ந்த ஏனைய மின் விளக்கு வகைகள், மோட்டார் கார்கள், மோட்டார் சைக்கிள்கள், ஸ்ரேசன் வகன்கள், வாசனைப் பொருட்கள், சவர்க்காரம்.

பொலிஷ் வகைகள், சுத்தமாக்கப்படும் பொருட்கள், புகைப்பட, திரைப்படப் பொருட்கள், அவை சம்பந்தமான உபகரணங்கள், 35 எம். எம். சினிமாப் படச் சுருள்கள், தொலைக்காட்சி, ரேடியோ வகைகள், வீடியோ கசட்கள், இசைத் தட்டுகள், கைக்கடிகாரங்கள், மணிக்கூடுகள்.

சுவர் அலங்கார விரிப்புக்கள், தரை அலங்கார விரிப்புக்கள் போன்றவையாகும்.

இநதப் புதிய கட்டுப்பாடு காரணமாக இறக்குமதியாளர்களின் எண்ணிக்கையில் ஒரு வீழ்ச்சி ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால் ஒரு சில பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படக்கூடிய நிலை ஏற்படலாம்.

இதனைத் தொடர்ந்து அந்தப் பொருட்களின் விலைகளில் இயற்கையாகவே ஒரு அதிகரிப்பு ஏற்பட இடமிருப்பதாகவும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் இந்தக் கட்டுப்பாடு காரணமாக இறக்குமதிப் பொருட்களின் விலைகள் நூறு சதவீதம் அதிகரிக்கும் என்று விளங்கிக்கொள்வது தவறாகும் எனப் பொருளாதார வட்டாரங்கள் தெரிவித்தன.

# தென்பகுதி மோதல்கள்: 7 பேர் படுகொலை; பலர் காயம்

(கொழும்பு)

கடந்த வாரம் தென்பகுதி தீவிரவாதிகளுக்கும், ஆயுதப் படை வீரர்களுக்குமிடையில் இடம்பெற்றபல்வேறுமோதல் சம்பவங்களில் பாதுகாப்பு படையினர் தரப்பிலும்பொலிஸார் தரப்பிலும் ஏழுபேர் கொல்லப்பட்டதாகவும் பலர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கெபிதிகொல்லாவ எதகட என்ற இடத்தில் இடம்பெற்ற கண்ணிவெடிச் சம்பவம் ஒன்றில் மூன்று பொலிஸாரும் பொதுமக்களில் ஒருவரும் கொல்லப்பட்டனர்.

தெகிவளையில் போக்குவரத்துச்சபை பஸ் ஒன்றுக்கு பாதுகாப்புவழங்கிய இரண்டு இராணுவ வீரர்களை நோக்கி தீவிரவாத சந்தேகநபர்கள் துப்பாக்கிப் பிரயோகம்செய்த போது ஒருவீரர் கொல்லப்பட்டார். மற்றவர் காயமடைந்தார்.

இந்த இராணுவ வீரர்களிடமிருந்த T-56 ரக துப்பாக்கிகள் இரண்டையும் சந்தேநபர்கள் அபகரித்துச் சென்றனர்.

கடுவல பாலத்தை காவல் செய்துகொண்டிருந்த இராணுவ வீரர்கள் தாக்கப்பட்ட போது தீவிரவாதி ஒருவர் கொல்லப்பட்டதாயும் பல இராணுவ வீரர்கள் காயமடைததாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

குருநாகல் மாவட்டத்திலுள்ளகெபிடிபொல, பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள ஜயந்திபுர ஆகிய இடங்களில் தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் இரண்டு இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர்.

மாவத்தகம பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த ஊர்காவல் படைவீரர் ஒருவரும் சுட்டுக் கொல்லப்பட்டார்

களுத்துறை மாவட்டத்திலுள்ள கலகமுவ என்ற இடத்தில் பொலிசார் அந்தப்பகுதியிலுள்ள பொதுமக்களிடமிருந்துதுப்பாக்கிகளை சேகரித்துக்கொண்டிருந்தபோதுதீவிரவாதிகளினால் தாக்குதலுக்குள்ளானார்கள்,

பொலிசார் மேற்கொண்டபதில் தாக்குதலின்போது தீவிரவாதி ஒருவர் கொல்லப்பட்டார்,

நிக்கவெரட்டிய பொலிஸ் பகுதியில் மகெலாகம என்ற இடத்தில் பொலிஸ்ரோந்துப் படையினரும் தீவிரவாதிகளும் நேருக்குநேர்சந்தித்து மோதிக் கொண்டனர்.

களுத்துறை ருவியாவெவ ஆகிய பகுதிகளில் துப்பாக்கி நபர்களால் மூன்றுபேர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

குருநாகல் மாவட்டத்திலுள்ள கடுபொத்த என்ற இடத்தில் சக்திவாய்ந்த நிலக் கண்ணிவெடி ஒன்றையும் பொலிஸார்கண்டுபிடித்தனர்:

சம்பந்தப்பட்ட பகுதியில் பொலிஸார் கால்நடையாக ரோந்து சென்று கொண்டிருந்த வேளையில் இந்த கண்ணிவெடிகண்டுபிடிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

## இராசி பலன்

**21-06-1989**

துவாதியை பகல் 11.28 வரை: உத்தராடம் பின்இரவு 5.02 வரை அமிர்தசித்த யோகம். இராகுகாலம் 11.54 முதல் 1.28 வரை, சுபகருமங்கள் செய்யலாம்.

மேடம்: அதிஷ்ட வாய்ப்பு, தொழில் மூலமான உயர்வு, குடும்ப மகிழ்ச்சி, பயணங்களால் நன்மை, புதிய உறவு.

இடபம்: அயலவர் பகை, குடும்ப சிக்கல், வைத்திய செலவு, பெண் விரோதம், அதிக செலவு.

மிதுனம்: வீண்பயம், அதிகாரிகள் தொல்லை, வாக்கு வன்மை. தொழில் பிணக்கு, பணமுடை, அதிகாரம்.

கடகம்: விவகார முயற்சி இழுபறி. குடும்ப பொறுப்பு மேலதிகாரிகள் கெடுபிடி, கணவன் மனைவி கருத்து வேறுபாடு.

சிங்கம்: காரியம் கைகூடும், விருந்துபசாரம், தாயார் உதவி, பணவரவு. மனமகிழ்ச்சி.

கன்னி: பிணிவாட்டும், வேதனைப்படல், தொழில் மூலமான கவலை, மனைக்கஷ்டம். கோபமடைதல்.

துலாம்: குரூரத்தன்மை, நண்பர் விரோதம், பணக் கவலை, மாமனார் கேடு, அதிகாரம்மதை.

விருச்சிகம்: பூமிப்பேறு, குடும்ப ஒற்றுமை, சகோதர உதவி, கடல் பயணம் மக்களால் புகழ்.

தனுசு: துடுக்குப் பேச்சு, அந்நியர் நட்பு, குடும்ப கலகம், பொருள் நஷ்டம் மனக் கவலை.

மகரம்: புதிய ஸ்நானம், காதல் உறவு, தொழில் மேன்மை, தூரத்து செய்தி, தலைமைத்துவம்.

கும்பம்: பொருள் தவறும், வைத்திய செலவு, கண்ணியக் குறைவு, அதிகாரிகள் சீற்றம், கவலை.

மீனம்: புத்திர வழித்துன்பம், கடன் சுமை, தேவையற்ற நெருக்கடி, அகால போசனம். பொறுமை தேவை.

## வருடாந்த உற்சவம்

(பருத்தித்துறை)

புலோலியிலுள்ள மந்திகை அருள்மிகு ஸ்ரீ முருகப்பெருமான் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 7-ம் திகதி ஆரம்மாகி நடைபெற்றுவருகின்றது. தினமும் காலையில் விசேட அபிஷேகமும், மாலையில் முருகப்பெருமான் வீதி வலம் வருதலும் நிகழும். இம்மாதம் 26ம் திகதி நடைபெறும் விசேட திருவிழாவுடன் இவ்வருடாந்த உற்சவம் பூர்த்தியடையும்.

## அன்னதானம்

[ஊர்காவற்றுறை]

புளியங்கூடல் ஸ்ரீ மகாமாரி தேவஸ்தான உற்சவ காலங்களில் மகாமாரி அன்னதான சபையினர் தங்களது மடத்தில் அடியார்களுக்கு அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்துள்ளனர்.

சனிக்கிழமை கொடியேற்றத்துடன் உற்சவங்கள் ஆரம்பமாகியுள்ளன.

## இடமாற்றம்

[பருத்தித்துறை]

மட்டக்களப்பு கல்வித் திணைக்களத்தில் லிகிதர்களாக கடமையாற்றிய திரு. எஸ். சந்திரயோகன் யாழ். கல்வித் திணைக்களத்திற்கும் திருமதி விமலாதேவி சந்திரயோகன் பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்திற்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

## பண்டத்தரிப்பு கோட்டக் கல்வி அலுவலகம் மூலம் ஆசிரியர்களுக்கு சம்பளம்!

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு கோட்டக் கல்வி அலுவலகப் பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலை ஆசிரியர்களுக்கு எதிர்வரும் ஜூலை மாதம் தொடக்கம் சம்பளப் பணம் முதல் தடவையாகப் பண்டத்தரிப்பு கோட்டக் கல்வி அலுவலகத்தினால் வழங்கப்படவுள்ளது.

வட்டுக்கோட்டை, காங்கேசன்துறை ஆகிய இரு தொகுதிகளைச் சேர்ந்த பாடசாலைகளை உள்ளடக்கிய பண்டத்தரிப்பு கோட்டக் கல்வி அலுவலகம். ஆசிரியர்களின் சம்பளத்தை வழங்குவதற்கு வசதியாக காங்கேசன்துறை இலங்கை வங்கிக் கிளையில் கணக்கு ஒன்றைத் திறந்துள்ளது.

சகல பாடசாலைகளின் அதிபர்களும் தங்கள் சம்பளத்தை பெறுவதற்கு வசதியாக ஆசிரியர்களின் கிராமியவங்கி அல்லது வேறு வங்கிக் கணக்கு இலக்கத்தையும் மற்றும் விபரங்களையும் உடனடியாகத் தமது அலுவலகத்திற்குத் தந்துதவவேண்டும் என்று பண்டத்தரிப்பு கோட்டக் கல்வி அதிகாரி திரு. இ. சிவானந்தன் அறிவித்துள்ளார்.

## கிராமிய நடனத்தில்

# தமிழ்கலாசாரப்பகுதிகளையும்

## சேர்க்க கொத்தணி அதிபர்கள் முடிவு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு கோட்டக் கல்வி அலுவலகம் நடத்தவிருக்கும் போட்டிகளில், கிராமிய நடனத்தில் தமிழ் கலாசாரத்திற்கான பகுதிகளையும் சேர்த்துக் கொள்ளுவது என்று கோட்டக்கல்வி அதிகாரி நடத்திய கொத்தணி அதிபர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டம் பண்டத்தரிப்பு கோட்டக்கல்வி அதிகாரி திரு. இ. சிவானந்தன் தலைமையில் நடைபெற்றது.

அண்மையில் கல்வி அமைச்சு விடுத்திருந்த சுற்றறிக்கையில் கிராமிய நடனத்தில் மீனவ நடனம், களகு நடனம் [illegible] நடனம் ஆகியவை மட்டுமே இடம் பெற வேண்டுமென்றும் தெரிவித்திருந்தது.

தமிழ் கலாசாரத்துடன் சம்பந்தப்பட்ட கிராமிய நடனங்களையும் இப்போட்டியில் இடம்பெறச் செய்யவேண்டும் என்று கருதி பண்டத்தரிப்பு கோட்டக்கல்வி அலுவலகம் நடாத்தவிருக்கும் போட்டிகளில் கிராமிய நடனத்தில் தமிழ் கலாசாரத்திற்கான பகுதிகளையும் சேர்த்துக்கொள்வது என்று முடிவு செய்யப்பட்டது. சங்கீத, நடன, நாடகப்போட்டிகளை சிறந்த முறையில் நடாத்துவதற்கு பொறுப்பாக ''பண்டத்தரிப்பு கோட்டக் கல்வி அலுவலக [illegible] செய்யப்பட்டுள்ளது.

கொத்தணி பாடசாலைகளின் பிரதிநிதிகள் இக் குழுவின் உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

இதேவேளை இந்த சங்கீத, நடன, நாடகப்போட்டிகளின் இறுதி நிகழ்ச்சிகளை பண்டத்தரிப்பு, தெல்லிப்பழை, சுழிபுரம், காரைநகர் ஆகிய இடங்களில் நடாத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சங்கீத, நடன, நாடகப் போட்டிகளை கோட்டக்கல்வி அலுவலக மட்டத்தில் இப் மாதம் 30-ம் திகதிக்கு முன்னர் நடாத்துவது என்றும் இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## நூல் வெளியீட்டு விழா

(பருத்தித்துறை)

கவிஞர் துன்னையூர் சி. செல்லமுத்துவின் 'பொன்மாரி' நூல் வெளியீட்டுவிழா எதிர்வரும் 25ம்திகதி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் கலாநிதி வித்துவான் ந. க. வேலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

சிவனின் அம்சமாகத் தோன்றிய ஸ்ரீமத் ஆதிசங்கராச்சாரியர் வடமொழியில் எழுதிய ஞான நூல்களில் ''கனகதாரா'' நூலும் ஒன்றாகும். இந்த நூலின் தமிழாக்கமே ''பொன்மாரி'' நூலாகும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா வங்கி ஊழியர் யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றம்

(வவுனியா)

வவுனியா மக்கள் வங்கியில் கடமையாற்றிய திரு. இ. வரதலிங்கம் இம்மாதம் தொடக்கம் மக்கள் வங்கியின் யாழ். பிரதான வீதி கிளைக்கு இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார்.

இவருடன் திரு.ரி.சிவகுமார் திரு. எஸ். சத்தியமூர்த்தி, ஆகியோரும் முறையே யாழ். நவீன சந்தைக் கிளைக்கும், ஊர்காவற்றுறைக் கிளைக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அடுத்த மாதம் முதல் திரு. எம். சந்திரகாந்தன், திரு. சிவஞானசுந்தரம், திரு. ஏ. சண்முகநாதன் முறையே காங்கேசன்துறை, பருத்தித்துறை, யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளைகளுக்கும் இடமாற்றம் பெறுகின்றார்கள்.

ஆகஸ்ட் மாதம் தொடக்கம் திரு. எம். என். ராஜதுரை, திரு. எஸ். சிவமயம் முறையே சாவகச்சேரி, யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளைக்கும் இடமாற்றம் பெறுகின்றார்கள்.

இவர்களின் இடங்களை நிரப்ப 5 பெண்கள் உட்பட 9 ஊழியர்கள் யாழ்ப்பாணப் பகுதி வங்கிகளிலிருந்து இடமாற்றம் பெற்றுள்ளதாக வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

## நோயினால் ஊழியர்களும் பாதிப்பு

(சுன்னாகம்)

வலிகாமம் வடக்குப்பகுதியில் நெருப்புக்காய்ச்சல் வருத்தம் வேகமாகப் பரவிவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது இவ்வருத்தத்தினால் பிடிக்கப்பட்ட பலர் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதேசமயம் வைத்தியசாலைஊழியர்களில்சிலரும் இவ்வருத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

ஈக்களினாலும்நீரினாலும் இவ்வருத்தம் மற்றவர்களுக்குத் தொற்றிக் கொள்ளுமாதலால் சுகாதார விதிகளை அனுசரித்து நடக்குமாறு ஆலோசனைகூறப்படுகிறது.

## நோயாளர் பாதிப்பு

(புங்குடுதீவு)

நெடுந்தீவு அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் பெருந்தொகையான நோயாளர்கள் பல் வைத்தியர் இல்லாமல் பாதிக்கப்பட்டுள்ளனர்.

புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலையிலிருந்து செல்லும் வைத்தியரே இரண்டு நாட்கள் அங்கு தங்கியிருந்து சிகிச்சை அளித்து வருகின்றபோதிலும் அவரது சேவை போதாமலிருப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றார்கள்.

## மீண்டும் 'ஜனசக்தி' வேலைகள்

[மன்னார்]

மன்னார் மாவட்டத்தில் மீண்டும் ஜனசக்தி வேலைகள் ஆரம்பமாகியுள்ளன. சில மாதங்களாக இவ்வேலைகள் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன.

முன்னர்போல ஜனசக்திக் குழு இயங்காது. கிராமசேவையாளர்மட்டுமே இயங்குவார். உணவு முத்திரை பெறும் எல்லாக் குடும்பங்களுக்கும் அவர் 'ஜனசக்தி வெளிப்படுத்தல்' என்ற படிவத்தை விநியோகம் செய்வார். அப்படிவத்தில் இருந்தே ஜனசக்தியின் மூலம் நன்மை பெறும் குடும்பங்கள் தெரிவு செய்யப்படுவார்கள். முதற் கட்டம் இம்மாதம் 29ந் திகதி அமுலாக்கப்படுமெனத் தெரியவருகிறது.

## நுகர்ச்சியாளர் சமாசம் நிறுவப்படும்

[யாழ்ப்பாணம்]

வடக்கு, கிழக்கு மாகாணத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களை உள்ளடக்கியதாக நுகர்ச்சியாளர் கூட்டுறவுச் சமாசம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

பொருள்களை மொத்தமாகக் கொள்வனவு செய்து அங்கத்துவ சங்கங்களுக்கு வழங்கும் நோக்குடனேயே இச்சமாசம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இச்சமாசத்திற்கு கூட்டுறவுச் சங்கம், வங்கிகள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

இச்சமாச அங்குரார்ப்பணக் கூட்டத்திற்குமுன் யாழ். மாவட்டத்திற்கான சமாசம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

## இலவச வகுப்பு

[புங்குடுதீவு]

புங்குடுதீவு புனித சவேரியார் ஆலய பங்கில் உள்ள கிறிஸ்தவ சிறுவர்களுக்கு சமய அறிவைப் புகட்டவும், அவர்களுக்கு எழுத்தறிவை வழங்குவதற்கும் இலவச சமய வகுப்பொன்று நடாத்தப்பட்டு வருகின்றது.

இவ்வகுப்புகள் ஞாயிற்றுக்கிழமை தோறும் காலை பத்து மணியளவில் புங்குடுதீவு றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் நடைபெறுகின்றன.

இங்கு சுமார் எழுபதுக்கும் அதிகமான சிறுவர்கள் கல்வி பயின்று வருகிறார்கள்.

## பிரிவுபசாரம்

[யாழ்ப்பாணம்]

நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரியான திரு. சு. விநாயகமூர்த்தி மருதனுமடம் கோட்டக் கல்விக் காரியாலயத்திற்கு கல்வி அதிகாரியாக இடமாற்றம் செய்யப்படுவதை முன்னிட்டு யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையில் பிரிவுபசாரம் நடாத்தப்பட்டது.

0 0 0

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்ட பிரதம தபாலதிபர் திரு. எம். ரி. தர்மலிங்கம் ஓய்வுபெறுவதை முன்னிட்டு கிளிநொச்சி வர்த்தக சங்கத் தலைவர் திரு. செல்லையா சிவசாமி தலைமையில் பிரிவுபசார வைபவமொன்று நடைபெற்றது.

வவனியா, கிளிநொச்சி மாவட்ட தபால் அத்தியட்சகர் அ. சிவபுரத்தரசன், கிளிநொச்சி தபால் அதிபர் திரு. இ. குணைந்தசிவம், டாக்டர் திருலோகமூர்த்தி உட்படப் பலர் இவ்வைபவத்தில் பேசினார்கள்.

## பாராட்டு வைபவம்

(சுன்னாகம்)

யாழ். கல்வித் திணைக்கள பிரதம கல்வி அதிகாரி திரு. க. கந்தசாமி பிரதிக் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்று இடம் மாறிச் செல்வதைக் கௌரவித்து மருதனுமடம் கோட்டக்கல்வி அலுவலகத்தில் கல்வி அதிகாரி திரு. ஆர். கே. குலசேகரன் தலைமையில் பாராட்டு வைபவமும் மதியபோசன விருந்தும் நடத்தப்பட்டது.

இவ்வைபவத்தில் யாழ். மாவட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பி, கோட்டக் கல்வி அலுவலர்கள், மருதனுமடம் கோட்டத்தைச் சேர்ந்த கொத்தணி அதிபர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



யாழ்ப்பாணம், திருநெல்வேலி சைவவித்தியா விருத்திச் சங்க மண்டபத்தில் சட்டத்தரணி எஸ். ஆர். கனகநாயகத்தின் 31-ம் நாள் நினைவாக அவரின் உருவப் படத்தை யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் எஸ். துரைராசா திரை நீக்கம் செய்தும் அன்னாரின் நினைவு மலரை யாழ். மாவட்ட நீதிபதி திரு. பொ. பாலவடிவேலு வெளியிட்டு வைத்து உரையாற்றும் பொழுதும் எடுக்கப்பட்ட படம்.

## மருத்துவ மனை

(பலாலி)

இளவாலை மயிலங்கூடல் பகுதியில் ஒரு புதிய அரச மருத்துவமனை கட்டப்பட்டு வருகிறது.

## அநாதரவான தபாற் பெட்டிகள்

(சுண்டுக்குளி)

சண்டிலிப்பாய், மானிப்பாய் பகுதிகளில் உள்ள சில தபாற் பெட்டிகள் திறந்த நிலையில் காணப்படுகின்றன.

கடந்த பல மாதங்களாக மானிப்பாய் கிறீன் வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள தபாற்பெட்டியும், சண்டிலிப்பாய் ஐயனார் வீதியில் உள்ள தபாற் பெட்டியும் திறந்த நிலையிலேயே உள்ளன. இதனால் இப்பகுதி மக்கள் தபால்களை அனுப்புவதற்குத் தூர இடங்களில் உள்ள தபாற் பெட்டிகளையே நாடவேண்டியுள்ளது.

# நான்கு தினங்கள் நடைபெற்ற யாழ். மாவட்ட சிரேஷ்ட சாரணியர்களின் பாசறை!

**யாழ்.** மாவட்ட சாரணியர், சிரேஷ்ட சாரணியர்களின் பாசறையொன்று பல ஆண்டுகளுக்குப் பின்னர் அண்மையில் நடைபெற்றது. நான்கு நாட்கள் நடைபெற்ற இச்சாரணியர்களின் பாசறை வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரியில் இடம் பெற்றது.

யாழ். மாவட்டத்திலுள்ள 20 பாடசாலைகளைச் சேர்ந்த 160 சாரணியர்களும், 13 சிரேஷ்ட சாரணியர்களும் இப்பாசறையில் கலந்துகொண்டனர். ''முல்லைவனம்'' எனப் பெயரிடப்பட்ட இப்பாசறை, பூஞ்சோலை, பழச்சோலை, மரச்சோலை, பறவைச்சோலை, மிருகச் சோலை என்னும் உப-பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு செல்வி பரஞ்சோதி, செல்வி ஜீவானந்தம், செல்வி கனகராஜா, திருமதி நாவரட்ணராஜா, திருமதி நல்லருளானந்தம் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

உணவுப் பகுதிக்குப் பொறுப்பாயிருந்த திருமதி குணரத்தினம், திருமதி பாலச்சந்திரன், திருமதி பரஞ்சோதி, திருமதி ஜெயந்தி, திருமதி மித்திரரஞ்சன், செல்வி இராசையா ஆகியோர் பாசறைவாசிகளுக்கு வேண்டிய உணவு வகைகளைச் சிறப்பாக வழங்கிப் பாசறைக் கருமங்களுக்கு ஒத்தாசை வழங்கினர்.

திருமதி சச்சிதானந்தம், திருமதி கணேசநாதன், திருமதி தவராஜா, செல்வி கிருஷாந்தி, செல்வி யோகராணி ஆகியோர் சுத்தம், சுகாதாரப் பகுதிக்குப் பொறுப்பாயிருந்து பாசறையின் சகல பகுதிகளின் சுத்தங்களைப் பேணவும், நோயுற்றவர்களைப் பராமரிப்பதிலும் ஈடுபட்டிருந்தனர்.

சிரேஷ்ட சாரணியர்களுக்குப் பொறுப்பான செல்வி சித்திரா அருள்நந்தி மாதிரிப் பாசறையொன்றை அமைத்து வயதிற்கூடிய சிரேஷ்ட சாரணியர்களை வெகு சிறப்பாக வழிநடத்தினர். செல்வி கலாமதி தெய்வநாயகம் அவருக்கு உதவியாக இருந்தார்.

நேர அட்டவணைப்படி தத்தம் குழுக்களுக்குக் கொடுக்கப்பட்ட கடமைகளோடு கூடாரம் போடுதல், பாசறைக்குத் தேவையான உபகரணங்கள் செய்தல், கைவேலை பழகல், விளையாட்டு, விளையாட்டுப் போட்டி, இயற்கையோடு சில நேரம், சாரணியர்களின் பொது சமயநிகழ்ச்சி, பாசறை [illegible] தல், பாசறை அழகுராணிப் போட்டி என்பன சிறப்பு நிகழ்ச்சிகளாக அமைந்திருந்தன.

செல்வி இந்திரரூபி தேவையற்ற பொருட்களில் சிக்கனமானமுறையில் அழகும், உபயோகமுமான பொருட்களைத் தயாரித்துக் காட்டி அவைபற்றிக் கற்பித்தார்.

யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி சாரணர்கள் அங்கு தொங்கு பாலம், கயிற்றின உதவியுடன் உயரம் ஏறுதல் போன்றனவற்றைச் செய்து காட்டினர். செல்வி மேரி எலாயசின் தலைமையில் நடைபெற்ற பாசறைத் தீ வைபவம் 20 பாடசாலைகளிலிருந்து வந்த சாரணியர்களின் பாட்டு, நடிப்புத் திறனை எடுத்துக்காட்ட ஒரு நல்ல சந்தர்ப்பமாக இருந்தது. அவர்களுக்குப் போட்டிபோல் சாரணியத் தலைவியர்களும் எதுவித முன் ஆயத்தமும் செய்யாமல் நடிக்கும் திறனைக் காட்டினர்.

பொதுவாக இச்சாரணியர்களும் அவர்களது தலைவிகளும் இந்நான்கு நாட்களையும் மிகச் சந்தோஷமாகவும், குதூகலமாகவும் களித்தது மாத்திரமன்றி வாழ்க்கைக்கு மிக இன்றியமையாததான பல்வேறு வகையான புதிய அனுபவங்களையும் பெற்றுக்கொண்டனர்.

(பருத்தித்துறை நிருபர்)

## 60ம் நாள் நினைவஞ்சலி



**திருமதி கிறேஸ் அருளானந்தம்**

(ஆசிரியை பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி)

தோற்றம்: 23-11-1934 மறைவு: 23-4-1989

ஆழ்கடலே வற்றிடினும் உன் தாயன்பு குன்றிடுமோ தாயிழந்து கதறியழும் சேய்கள் குரல் கேட்கலையோ தொய்ந்த உந்தன் பெற்றோரின் நொந்தமனம் காணலையா சோதரர்கள் கூட்டமதில் மொழியின்றி மௌனமதேன் பல திக்கு நண்பர்கள் தேடியுன்னை வந்தனரே கல்விப்பசி தீர்த்திடவே கல்லூரி மாணவர்கள் வாட்டமுடன் உன் முகத்தை தீரமுடன் தேடினரே எல்லோர்க்கும் எல்லாமாய்வாழ்ந்த உந்தன் தியாகமதை என்னென்று மறந்திடுவோம் எங்கு சென்று தேடிடுவோம், கண்ணீர்தான் எம்கதியோ - உம் அன்பு, இன்பமுகம் காணும் நாள் வந்திடாதோ

இவரின் பிரிவால் துயருறும்

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பெற்றோர், சகோதரர். உறவினர், நண்பர்கள், மாணவர்கள்.**

சில்லாலை.

(சி 2988)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத மின் பாவனையை கட்டுப்படுத்த நடவடிக்கை

(பருத்தித்துறை)

சட்ட விரோத மின்பாவனைக்கு எதிராக உடனடி நடவடிக்கை எடுக்குமாறும், சட்டவிரோத மின்பாவனைக்கு எதிராக நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். டிவகலால எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது சம்பந்தமாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ். மாவட்டத்தில் உள்ள சகல பிரதேச சபைகளின் விசேட ஆணையாளர்கள், மாநகரசபை ஆணையாளர், நகரசபைச் செயலாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

அவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: யாழ். மாவட்டத்தில் சட்டவிரோத மின்பாவனை காரணமாக லட்சக்கணக்கான பணம் இலங்கை மின்சார சபைக்குச் செலுத்த வேண்டியுள்ளது. 1987ம் ஆண்டு இறுதி வரை ஏறக்குறைய 400 லட்சம் ரூபா மின்சார சபைக்கு நிலுவையாக உள்ளது. இத்தொகை அன்றிலிருந்து நாளாந்தம் அதிகரித்து வருகிறது. யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை இயங்கியபோது இப்பணத்தை மின்சாரசபைக்குச் செலுத்தமுடியாமற்போனதற்கு மின்சார விநியோகத்தில் ஏற்பட்ட நஷ்டமே பிரதான காரணமாகும்.

சட்டவிரோத மின்பாவனையால் யாழ். மாவட்டமே இருளில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதுடன், பெருந்தொகையான உயிராபத்துகளும் ஏற்பட்டுவருவதாகவும் பல சமூகசேவை நிறுவனங்கள் கவலையும் கண்டனமும் தெரிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## ஆசிரியர்கள்மீது தாக்குதல்: தோட்டத்தில் வன்முறை

(கொழும்பு)

மஸ்கெலியாவில் இரு தொண்டர் ஆசிரியர்கள் அப்பகுதியைச் சேர்ந்த சிலரால் தாக்கப்பட்டது தொடர்பாக ஏழு தோட்டங்களைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதையடுத்து ஐந்து தோட்டத் தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மஸ்கெலியாவில் உள்ள ஒரு பாடசாலையில் ஏற்பட்ட சிறு சம்பவத்தையடுத்து எஸ். சேகர், எஸ். ரவீந்திரன் ஆகிய இரண்டு சகோதர தொண்டர் ஆசிரியர்கள் நான்கு வெளியாட்களால் தாக்கப்பட்டனர். இதன் விளைவாக இரு தொண்டர் ஆசிரியர்களும் பலத்த காயங்களுடன் மஸ்கெலியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றனர்.

தொண்டர் ஆசிரியர்கள் தாக்கப்பட்டதன் காரணமாகவும், விசாரணையில் கொண்ட அதிருப்தியின் காரணமாகவும் சில தோட்டத் தொழிலாளர்கள் ஆத்திரம் கொண்டு தாக்குதலில் சம்பந்தப்பட்டவர்களின் வீடுகளையும், சிலகடைகளையும் தாக்கினர்களாம்.

இதனை அடுத்து பொலிஸார் மஸ்கெலியா-சாமிமலை தோட்டத்தைச் சேர்ந்தவர்களைத் தாக்கியதாகவும் இதனைத் தொடர்ந்து தோட்டத்தொழிலாளர்களும் திருப்பித் தாக்கியதாகவும் இதில் ஒருபொலிஸ்காரர் காயமடைந்ததாகவும் கூறப்படுகிறது. மேலும் ஏனைய தோட்டத் தொழிலாளர்களுக்கும், பொலிசாருக்குமிடையில் மோதல் உருவாவதாகவும் கூறப்படுகிறது.

இதனால் லட்சுமித் தோட்டம், சின்ன நடுக்கணக்குத் தோட்டம், பிரவுண்ஸ்விக் தோட்டம், புளூபீல்ட் தோட்டம், குயின்லான்ட் தோட்டம், மேட்டிங்ஹாம் தோட்டங்களைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் குதித்தனர்.

கைது செய்யப்பட்டுள்ள சுகேந்திரன், சிவலிங்கம், ராஜாராம், கருப்பன், சுப்பிரமணியம் எனும் ஐந்து தோட்டத் தொழிலாளர்களும் தற்போது அட்டன் நகர் பொலிசில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

## கம்பியூட்டர் பயிற்சி நெறி

(பருத்தித்துறை

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சபையினால் நடத்தப்பட்டுவரும் கம்பியூட்டர் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பயிற்சி நெறியில் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ள விரும்பும் மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரி பழைய மாணவிகள், கல்லூரி அதிபரிடமிருந்து விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்று விண்ணப்பிக்கலாமெனக் கம்பியூட்டர் பயிற்சி நெறிப் போதனாசிரியர் திரு. எஸ். வேணுகோபால் தெரிவித்தார்.


**ஹரன் சினிமா**
(யாழ்ப்பாணம்)
3-வது வெற்றி வாரம்
சத்தியராஜ்—நதியா நடித்த
**சின்னத்தம்பி பெரியதம்பி**



**நியூசாந்தி** யாழ்நகர்
தினசரி 10-30, 2-30, 4-45
பயங்கரக் கராட்டிகள் [வாள்சண்டைகள், கார் ஓட்டங்கள் நிறைந்த படம்.
**MAJESTIC THUNDERBOLT**
(C/scope)


## கிராமிய அபிவிருத்திக்கு இளைஞர் சம்மேளனம்கொடித்தினம்

(கொழும்பு)

இளைஞர் கழகங்களுக்குத் தேவையான நிதி வசதிகளைப் பெற்றுக்கொடுக்கவும், கிராம மட்டத்திலான அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளவும் நிதி திரட்டும்முகமாக ஸ்ரீலங்கா இளைஞர் கழக சம்மேளனம் இம்மாதம் 26ம் திகதி இளைஞர் கொடி தினம் ஒன்றை நடத்தவுள்ளது. இதற்காக 34 லட்சம் கொடிகள் அச்சிடப்பட்டுள்ளன. இக்கொடி விற்பனைமூலம் 14 லட்சத்து 58 ஆயிரம் ரூபாவைத் திரட்ட சம்மேளனம் உத்தேசித்துள்ளது.

ஸ்ரீலங்கா இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவுபெற்றுள்ள இளைஞர் கழகங்களினூடாக இக்கொடி விற்பனை நடத்தப்பட்டு நிதிபெறப்படும். இக்கொடி விற்பனையின்மூலம் 250 ரூபாவுக்கு மேல் நிதிதிரட்டும் இளைஞர் கழகத்துக்கு அந்நிதியின் 40 வீதத் தொகை வழங்கப்படும். அத்துடன் மாவட்ட மட்டத்தில் ஆகக்கூடிய கொடி விற்பனை நிதியைத் திரட்டும் மூன்று இயக்கங்களுக்கு முதலாம் பரிசாக 1500 ரூபாவும், 2ம் பரிசாக 1000 ரூபாவும், 3ம் பரிசாக 500 ரூபாவும் வழங்கப்படும்.

சம்மேளனத்தினால் திரட்டப்படும் நிதி மீண்டும் அந்த இளைஞர் கழகங்களின் செயற்திட்டங்களுக்கே செலவழிக்கப்படுகிறது என சம்மேளனத்தின் இயக்குநர் திரு. நிஸ்ஸ விஜயதுங்கா தெரிவித்தார்.

## இளைஞர் கருத்தரங்கு

(மன்னார்)

பேசாலை புனித பீற்றர்ஸ் கழக இளைஞர்களுக்கு தலைமன்னார் புனித யாகப்பர் ஆலயத்தில் ''வாழ்க்கை'' என்னும் தலைப்பில் ஒரு கருத்தரங்கு நடத்தப்பட்டது.

பயிற்சி நெறியை தாழ்வுபாடு பங்குத்தந்தையும், மன்னார் மாவட்ட இளைஞர் பணி இயக்குநருமான அருட் திரு [illegible]


**எமது புதிய வெளியீடுகள்**

S. V. சேகர்—ரேகா—S. S. சந்திரன்
**தங்கமான புருஷன்**

பிரபு—ஸ்ரீவித்யா—விஜயகாந்த்
**முப்பெரும் தேவியர்**
(ஒறிஜினல்)

சிவாஜி—பத்மினி—தங்கவேலு
**இல்லற ஜோதி**
(ஒறிஜினல்)

**THE FIRING LINE**
(WAR)

**RETURN FROM THE RIVER KWAI**
(WAR)

**குணம் வீடியோ சென்ரர்**
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665.
(ஏ 296)


## இப்படியும் நடக்கிறது

அது ஒரு உபதபால் கந்தோர்.

எதையோ எதிர்பார்த்து, வயதான ஆண்களும் பெண்களும் கந்தோர் விறாந்தைகளிலும் படிகளிலும் அமர்ந்திருக்கின்றனர்.

அதிக நேரம் இவர்கள் காத்திருந்து விட்டனர் போலும். சோர்வு ஆட்கொண்டுவிட்டது. சிலர் அப்படியே, 'கையிலிருந்த ஊன்றுகோலையும் கீழே வைத்துவிட்டு கண்ணயர்ந்து விட்டனர்.

காலையில் எட்டுமணிக்கு வந்தவர்கள், நண்பகல் பன்னிரண்டு மணியைத் தாண்டியும் அவர்களின் வந்த நோக்கம் நிறைவேறவில்லை,

இரண்டு சைக்கிள்களில் இருவர்வருகிறார்கள். ஒருவரின் கையில் ஒரு பை தொங்குகிறது.

தபால்கந்தோர் படிகளிலும், விறாந்தையிலும் காத்திருந்தவர்கள் மத்தியில் சிறு பரபரப்பு. அந்த உள்ளங்களில் ஒரே மகிழ்ச்சி — அது அவர்களின் கண்களில் தெரிந்தது! என்ன...... விஷயம் புரியவில்லையா?

அங்கு காத்திருந்தவர்கள். தருமப்பணம் பெறவந்தவர்களே. இந்த உதவிப்பணம் வழங்கப்படும் திகதியை முன்கூட்டியே அவர்கள் தெரிந்திருந்ததால் எல்லோருமே அன்று கூடிவிட்டனர். ஆனால் தருமப்பணம் வழங்குவதற்கான பணம் தபாற்கந்தோருக்கு உரிய முறையில் அனுப்பப்படவில்லை. இவர்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக ஒரு தபால் நிலைய அதிபர் சைக்கிளில் தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சென்று, நாற்பதினாயிரம் ரூபாய் பெற்று அதனை அந்த உபதபால் அதிபரிடம் வழங்கியிருக்கின்றார். சைக்கிளில் சென்றுவந்தவர் சுன்னாகம் தபால் நிலைய அதிபர் திரு. இ. திருநாவுக்கரசு. தர்மம் தலை காக்கும்.

"ஊடுருவி"

## "செயல்படாத கிராம அமைப்புக்களை புனரமைப்புச்செய்ய வேண்டும்"

(மாவிட்டபுரம்)

''கிராம மட்டத்தில் இயங்கும் அமைப்புகள் தான் கிராம மக்களின் குறைபாடுகளை, தேவைகளை நன்கு அறிந்து அவற்றை தீர்த்து வைக்கமுடியும் ஆகவே கிராம மட்டத்தில் இயங்கும் அமைப்புகளை சிறப்பாக இயங்க வைக்க வேண்டும். செயல்படாத அமைப்புகளை புனரமைப்பு செய்யவேண்டும்.''

பழை கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் வீமன்காமம் மகா வித்தியாலயத்தில் நடத்தப்பட்ட கருத்தரங்கு ஒன்றில் கலந்து உரையாற்றிய வலி. வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. வ. இராசையா இவ்வாறு கூறினார்.

கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. ச. கந்தசாமி தலைமையில் நடந்த இக்கருத்தரங்கில் உதவி அரச அதிபர் மேலும் பேசுகையில் கஷ்டமுறும் மக்களின் குறைபாடுகளை, தேவைகளை தமது கவனத்திற்குக் கொண்டு வந்தால் முடிந்த அளவில் அவற்றை தீர்த்து வைக்க ஆவன செய்வதாகவும் குறிப்பிட்டார்.

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் திரு. சு. ஸ்ரீபாஸ்கரன் பேசுகையில் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் மூலம் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை செயற்படுத்த வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகவும், இதுபோல் ஒவ்வொரு கிராமத்திலும் கிராம அபிவிருத்தி சங்கம் சிறப்பாக செயல்பட்டு மக்களின் தேவைகளை நிறைவேற்ற முடியுமெனவும் குறிப்பிட்டார்.

வலி. வடக்கு கிராம அபிவிருத்தி அதிகாரி திரு. க. ஸ்ரீபதி, செயலாளர் திரு. வ. கிருஷ்ணபிள்ளை, திருமதி பராசக்தி கனகராஜேஸ்வரன் ஆகியோரும் உரையாற்றினர்.

(8ம் பக்கத் தொடர்ச்சி)

## 'மாணவர் உரிமை மதிக்க வேண்டும்'

(யாழ்ப்பாணம்)

'மாணவர்கள் கைதுசெய்யப்படுவது, தாக்கப்படுவது, கொலைசெய்யப்படுவது நாளாந்தம் நடைபெறுகிறது. மாணவர் உயிருக்கே உத்தரவாதமற்ற நிலையில், மாணவர்கள் எப்படி கல்வியைத் தொடர முடியும்' என்று யாழ். மாணவர் மன்றம் நேற்று பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கை மேலும் கூறுவதாவது:

'மாணவர்கள் நிம்மதியாக கல்வியைத் தொடர வேண்டுமாயின் மாணவர்களின் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும். பயிற்சிக்காக அழைத்து செல்லப்பட்ட மாணவர்கள் உடன் விடுதலை செய்யப்பட வேண்டும்.

மாணவர்களுடன் சம்பந்தப்பட்ட பெற்றோர், அதிபர்கள், ஆசிரியர்கள், புத்திஜீவிகள் மாணவரின் உரிமையை உறுதிசெய்யும் வரை பகிஷ்கரிப்பு தொடர்ந்து நடைபெறுவதற்கும் சகல பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள் மூடி பூரண ஒத்துழைப்பு நல்குமாறும் கேட்டுக் கொள்கிறோம்.

## பாதுகாப்பை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜெயராஜா பெர்னாண்டோ பிள்ளையின் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:

''வடக்கு-கிழக்கு பகுதிகளில் சகல யுத்த நடவடிக்கைகளையும் இலங்கை நிறுத்திக்கொண்டது. கிளர்ச்சிக் குழுக்களும் மோதல்களை நிறுத்திக்கொண்டன. எனினும் அது ஒரு தற்காலிக யுத்தநிறுத்தமாகவே இருந்தது. 1987ம் ஆண்டு செப்டம்பர் மாதம் இந்தியப் படையுடனான மோதல் ஆரம்பமானது. இரண்டு வருடமாகியும் அந்த யுத்தம் முடிவுறவில்லை.

''கிளர்ச்சிக்குழுக்கள் மிகவும் சொற்ப தொகையான ஆயுதங்களை மட்டுமே கையளித்தார்கள். அது அவர்கள் வசமிருந்த ஆயுதங்களில் சுமார் 20 சதவிகிதம் மட்டுமே.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை சகல பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள் வர்த்தக ஸ்தாபனங்கள், போக்குவரத்து சங்கங்கள், பூரண ஹர்த்தாலாக நடைமுறைப்படுத்துவதற்கு பூரண ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பாடசாலை மதிய உணவுத் திட்டம்: பெற்றோருக்கு பணம் வழங்க கொத்தணி அதிபர்கள் விருப்பம்!

## கல்வி அமைச்சு அதிகாரியிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மதிய உணவுத் திட்டத்துக்கு பெற்றோருக்கு பணம் வழங்கும் நடைமுறையை அமுல்படுத்தவேண்டும் என்று யாழ். மாவட்டத்திலுள்ள கொத்தணி அதிபர்கள் பலர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கல்வி அமைச்சில் மதிய உணவுக்குப் பொறுப்பாக கடமையாற்றும் கல்விப் பணிப்பாளர் திரு. வெ. சபாநாயகத்திடமே இவ்வாறு வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

யாழ். கல்வித் திணைக்களத்தில் மதியஉணவுத் திட்டம் தொடர்பான கூட்டமொன்றை திரு. வெ. சபாநாயகம் நேற்று நடத்தினர். இக்கூட்டத்தில் பேசிய பல கொத்தணி அதிபர்கள் மதிய உணவுத்திட்டத்தை மாற்றித் தருமாறு அவரிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

மதிய உணவுத்திட்டத்தினல் அதிபர்களுக்கு களங்கம் ஏற்படுவதாகவும், உணவு செய்வதற்கான உபகரணங்கள், சட்டிடங்கள், விறகுகள் போன்றவற்றிற்கு பெரும் சிரமப்படுவதாகவும், கஷ்டப்பட்ட பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளில் நீர்பெறுவது கூட சிரமமாக இருப்பதாகவும் அதிபர்கள் பலரும் சுட்டிக்காட்டினர்.

அதிபர்களின் கோரிக்கைக்குப் பதிலளித்துப் பேசிய திரு. வெ. சபாநாயகம், 'மத்திய அரசைப் பொறுத்தவரையில் மதிய உணவிற்குப் பதிலாக பணமும் வழங்கலாம் என்ற கொள்கை இருந்தாலும், இதுசம்பந்தமாக முடிவெடுக்கவேண்டியது மாகாண அரசேயாகும். எனவே மாகாண அரசு என்ன சொல்கிறதோ அதையே அதற்கு கீழுள்ள பாடசாலைகள் பின்பற்ற வேண்டும்' என்ருர்.

'என்ன சிரமம் இருந்தாலும் மாற்றுத் திட்டம் வரும் வரையும் இந்த உணவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

இக் குறைபாடுகள் தொடர்பாக மத்திய அரசிற்கும் எடுத்துரைத்து மதிய உணவுத் திட்டம் நல்ல முறையில் செயற்பட உதவி புரிவேன்' என்றும் அவர் கூறினர்.

இக் கூட்டத்தில் யாழ். மாவட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பி, கொத்தணி அதிபர்கள், கோட்டக்கல்வி அதிகாரிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# அடிகாயத்துடன் அனுமதிக்கப்பட்டவர் ஆஸ்பத்திரியில் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரில் அடிகாயங்களுடன் அனுமதிக்கப்பட்ட ஒருவர் நேற்று மரணமானர்.

முகமாலையைச் சேர்ந்த இராமசாமி நாகேந்திரராசா (வயது 35) என்பவரே இறந்தவராவார்.

இவர் கடந்த புதன்கிழமை பளை ஆஸ்பத்திரியிலிருந்து யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றம் செய்யப்பட்டு இங்கு நேற்று மரணமானர். சடலம் மரணவிசாரணையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (கு)

# முல்லைத்தீவு மக்கள்வங்கி செயலிழந்தது

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மக்கள் வங்கி நேற்றுத் தொடக்கம் கால வரையறையின்றி மூடப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

இந்த வங்கியின் ஊழியர்கள் பலர் நேற்று வடபிரதேச மக்கள் வங்கி தலைமை அலுவலகத்திற்கு வந்திருந்தனர்.


## மரண அறிவித்தல்

### திருமதி கமலாம்பிகை திருஞானம்

கொக்குவில் கிழக்கு திருமதி கமலாம்பிகை திருஞானம் 19-6-89ல் சிவபதமடைந்தார். இவர் திரு. R. S. திருஞானம் (ஓய்வுபெற்ற நெடுஞ்சாலை ஓவசியர்) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி பத்மலோஜினி சத்தியானந்தராசா, திருமதி மீனலோஜினி றஞ்ஜித் (U. K.), திரு. தி. காந்தன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. சி. சத்தியானந்தராசா [கச்சேரி, மட்டக்களப்பு], திரு. றஞ்ஜித் மாசிலாமணி, [சொலிசிற்ரர் U. K.], திருமதி புனிதவதி காந்தன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி நாகரத்தினம் அருணசலம், திருமதி மங்கையர்க்கரசி பரமேஸ்வரன் [U. K.], திரு. முத்துத்தம்பி மகாதேவா [S. K., விவசாய சேவைக்கால பயிற்சி நிலையம், கிளிநொச்சி] ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவன், லவன், குகன், செல்வன், நீலா, நிசாந்தினி, சயந்தினி, பிரதீபன், மித்திரன் ஆகியோரின் அன்புப் பேத்தியாரும், காலஞ்சென்ற முத்துத்தம்பி செல்லம்மா தம்பதிகளின் மூத்த புதல்வியுமாவார். ஈமக்கிரியைகள் 24-6-89 சனிக்கிழமை பி. பகல் 4-00 மணியளவில் கொக்குவிலில் நடைபெறும்.

தகவல்: திரு. R. S. திருஞானம்

றெயில் றோட்,
கொக்குவில்,
21-6-89. [சி-2818]


## அவசரகால நிலைமை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களை பேச்சுவார்த்தைக்கு அழைத்தபோதிலும் அப்பாவி பொதுமக்களையும், நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டப்பாடுபடும் பாதுகாப்புப்படையினரையும் பொலிஸாரையும்கொலைசெய்யும் சம்பவங்கள்திவிரமாகஅதிகரித்துவருகின்றன. தேர்தலில் மக்கள் பிரதிநிதிகளாக தெரிவுசெய்யப்பட்ட அரசியற் கட்சிப் பிரமுகர்களும் கொலை செய்யப்பட்டு வருகிருர்கள். இத்தகைய சூழ்நிலையில் அரசாங்கம் பார்த்துக்கொண்டிருக்கமுடியாது. இதனலேயே தயக்கத்துடனுயினும் அவசரகால சட்டத்தை அமுல்செய்யவேண்டியிருக்கிறது'' என்று தெரிவித்தார்.

அவசரகாலச்சட்டத்தை அமுல்படுத்துவதென்றுஐ.தே.க. பாராளுமன்றக் குழுவுக்கு நேற்றுக்காலை அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து நேற்று மாலை இதற்கான ஜனதிபதியின் உத்தியோகபூர்வ அறிவித்தல் வெளியிடப்பட்டது.

1983 ஜூலை முதல்தொடர்ந்து அமுலிலிருந்த அவசரகாலச்சட்டம் கடந்த ஜனவரி 12ம் திகதி நீக்கப்பட்டது தெரிந்ததே.

## மட்டக்களப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மினிபஸ் சேவையும் ஸ்தம்பித நிலை அடைந்துள்ளது. யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய தூர இடங்களுக்கான மினிபஸ் சேவை மட்டுமே நடைபெற்றது.

திங்கட்கிழமை தொடக்கம் பாடசாலைகள் திறக்கப்பட்டபோதிலும் மாணவர்கள் வரவு 10 வீதத்திற்கும் குறைவாகவே காணப்பட்டது. இ. போ. ச. வேலை நிறுத்தத்தால் தபால் சேவைகளும் சீர்குலைந்துள்ளன.

## கண்ணிவெடி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜே. வி. பி. யினரே மேற்கொண்டதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை நேற்று எட்டாவது நாளாக தென்பகுதியில் இ. போ. ச. ஊழியர்களின் வேலை நிறுத்தத்தினல் பஸ்கள் ஓடவில்லை.

## கத்திக்குத்துக்கு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இறந்தவரின் மாமனர் வைத்திலிங்கம் மகேஸ்வரன் (வயது 55) என்பவர் வெட்டுக் காயங்களுடன் ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சோமசுந்தரம் கனகராசா (வயது-55) என்பவரும் படுகாயமடைந்தார்.

இறந்தவரின் சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் மரண விசாரணையின் பின்னர் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது. (கு)

# மாவிட்டபுரம், மல்லாகத்தில் இருவர் சுட்டுக் கொலை

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரத்தில் ஒருவரும் மல்லாகத்தில் ஒருவரும் நேற்று இனந்தெரியாதவர்களினல் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

மாவிட்டபுரத்தில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டவர் கட்டுவன் தெற்கு முனியப்பர் கோவிலடியைச் சேர்ந்த கந்தையா குஞ்சுக்கிளி (வயது 38) என்று அடையாளம் காணப்பட்டுள்ளது. இவர் சந்தையில் வியாபாரம் செய்பவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இவரின் சடலம் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்தது.

மல்லாகம் கோட்டடிக்கு முன்பாக பஸ்தரிப்பு நிலையத்தில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டவர் ஏழாலை மயிலங்காட்டைச் சேர்ந்த முருகு சசிக்குமார் (வயது 15) என அடையாளம் காணப்பட்டுள்ளது.

# அளவெட்டியில் தொடர்ந்து பதற்றநிலை

(மாவிட்டபுரம்)

அம்பனை, கொல்லங்கலட்டி, பன்னலை பகுதிகள் நேற்று சுற்றிவளைக்கப்பட்டன.

சில இளைஞர்கள் விசாரணைக்காக கூட்டிச் செல்லப்பட்டதாகவும் கூறப்பட்டது.

நேற்றுப் பிற்பகல் அளவெட்டிப்பகுதியில் சரமாரியான துப்பாக்கிவேட்டுச்சத்தங்கள் கேட்டன.

இப்பகுதியில் கடந்த சில நாட்களாக பதற்ற நிலை நீடித்துவருகிறது.

### அச்சுவேலியில்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி பஸ் நிலையத்திற்குச் சமீபமாக துப்பாக்கிவேட்டுச்சத்தங்களும், கிரனைட் வெடிச்சத்தங்களும் நேற்று முன்தினமிரவு கேட்டது.

இது காரணமாக அப்பகுதியில் பதற்றமும் பீதியும் நிலவியதாகவும், நேற்றுக்காலை அப்பகுதியில் வாகனங்களின் போக்குவரத்து மிகவும் குறைவாக இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

### சுண்டிக்குளியில்

சுண்டிக்குளி குருசோவீதிப் பகுதி நேற்று பகல் சுற்றிவளைக்கப்பட்டு சில இளைஞர்கள் விசாரணைக்காக கூட்டிச் செல்லப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

## இலங்கை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரிஸா மாநிலம் செல்லும் வழியில் மானவி மான நிலையத்தில் சிறிது நேரம் தங்கிய பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அங்கு செய்தியாளர்களுக்கு அளித்தபேட்டியில் இதனைத் தெரிவித்தார்.

''இந்தியாவிற்கு சிலமுக்கியமான பொறுப்புகள் உண்டு. எல்லாவித பிரச்னைகளுக்கும் நாம் அமைதியான தீர்வு காண்போம். அண்டை நாடுகளுடன் இந்தியா எந்தவித குறிப்பிடத்தக்க பிரச்னைகளிலும் சம்பந்தப்படவில்லை. அண்டைநாடுகளுடன் சமாதானமாக இருக்கவே நாம் விரும்புகிறோம்'' என்றும் திரு. ராஜீவ் காந்தி தெரிவித்தார்.

## திருநெல்வேலி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முன்தினம் ஏற்பட்ட மேற்படி மோதலில் இருபடையினர் பலியானர்கள். சிலர் காயமடைந்தனர்.

இச் சம்பவத்தில் கோப்பாயைச் சேர்ந்த சன், புதுக்குடியிருப்பைச்சேர்ந்த பேபி ஆகியோரும் பலியானர்கள் என்று பின்னர் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

## விமானப்பயணிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சேவை நேற்று ஒன்றுக்கு மேற்பட்ட தடவை நடைபெற்றதாகவும் தெரியவருகிறது.

நேற்று பலாலியிலிருந்து சென்ற விமானத்தில் ஏராளமான இளைஞர்களும் மாணவர்களும் பயணம் செய்ததைக் காணமுடிந்தது.

## ரயில்-பஸ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து ரயில்நிலைய ஊழியர்கள் வேலைக்குச் சமுகமளிக்காததாலேயே சேவை பாதிக்கப்பட்டதாக அரசதரப்பில் அறிவிக்கப்பட்டது.

கொழும்பில் நேற்று மூன்று பஸ்கள் மட்டுமே ராணுவ பாதுகாப்புடன் சேவையிலீடுபட்டன. ஓட்டோ ரிக்ஷா உரிமையாளர்களும் நேற்று அடையாள வேலைநிறுத்தம் ஒன்றை நடத்தினர்கள்.

கொழும்பில் போக்குவரத்துச்சேவை முற்ருக பாதிக்கப்பட்டிருப்பதால் வீதிகள் வெறிச்சோடிக்காணப்படுகின்றன.

## இரு இளைஞர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டன, ஒருவரின் சடலம் கந்தர்மடத்தைச் சேர்ந்த சண்முகம் உதயவர்மன் (வயது 17) என்று அவரது தாயாரால் அடையாளம் காணப்பட்டது.

அடையாளம் காணப்படாதவர் சுமார் 20 வயது மதிக்கத்தக்கவராகவும், நீல நிற லோங்சும், வெள்ளை நிறஷேர்ட்டும் அணிந்தவராயுமுள்ளார்.

இரு சடலங்களும் யாழ். போதனு வைத்தியசாலை பிரேத அறையில் விசாரணைக்காக வைக்கப்பட்டுள்ளன. (கு)

## மாணவர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்பானவர்கள் துரிதமான தகுந்த நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் நாம் எமது கல்வியைத் தொடர முடியும் அதுவரை எமது போராட்டம் நீடிக்கும்'' என்று பாடசாலைகள் மாணவர் ஒன்றியம், நேற்றுவெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது. அந்த அறிக்கை மேலும் கூறுவதாவது:

''மாணவர்கள், ஆசிரியர்கள், புத்திஜீவிகள் படுமோசமாகப் பாதிக்கப்படுவதையும் பாதிப்பின் உச்சக்கட்டமாக படுகொலை செய்யப்படுவதையும் கண்டித்து தமது பாதுகாப்பிற்கு உத்தரவாதம் வழங்கக்கோரிப் பாடசாலைகளைப் பகிஷ்கரித்துவரும்இந்த வேளையில்கூட, மாணவர்கள், ஆசிரியர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்கள். சமீபத்தில் பரியோவான் கல்லூரி மாணவன் கஜேந்திரன், அச்சுவேலியில் ஆசிரியர் சி. விநாயகமூர்த்தி மற்றும் இரண்டு மாணவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது. அத்துடன் வீதிகளில் நடமாடும் இளம்வாலிபர்கள் குறிப்பாக மாணவர்கள் கடத்திச்செல்லப்படுவது மிகவும் கண்டிக்கப்படவேண்டியது.

மாணவர்கள் கடத்தப்படுவதும், படுகொலை செய்யப்படுவதும் தொடர்ந்தும் நிகழுமாயின் அவர்கள் தமது கல்வியைத் தொடரமுடியாது பாதுகாப்பை மட்டும் உறுதி செய்யப்படவேண்டிய கட்டத்திற்கு தள்ளப்படுவார்கள். இதனல் எமது இனம் பாரிய பின்விளைவுகளை எதிர்நோக்க வேண்டி ஏற்படும்.''

(7-ம் பக்கம் பார்க்க)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1989ம் ஆண்டு ஜூன் மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003e6/81. Eelanadu P. O. Box No: 49 Telegram, Eelanadu. Telephone: 22389. 24126

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org